REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஓகஸ்ட் 9 செவ்வாய்க்கிழமை


# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 186 | Tuesday 09, August, 2022 | 12பக்கங்கள் | 40/-







போதியளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளது;

## வரிசையில் நிற்காது தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்ளவும்



### பொதுமக்களுக்கு எரிசக்தி அமைச்சர் கஞ்சன அறிவிப்பு

போதியளவு எரிபொருள் இருப்பதனால் வரிசையில் நிற்காமல் எரிபொருளைப் பெற்றுக் கொள்ளுமாறு பொதுமக்களுக்கு எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர அறிவித்துள்ளார்.

தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரம் அல்லது QR முறையின் கீழ் எரிபொருள் பெறுவதற்கான இரண்டாவது 'கோட்டா' நேற்று முன்தினம் (07) நள்ளிரவு

04



இறக்குமதி பொருட்கள் குறித்து

## கடுமையான கண்காணிப்பினால் பொருட்களின் விலை வீழ்ச்சி

### வர்த்தக அமைச்சு தெரிவிப்பு

பொருட்களின் இறக்குமதி மற்றும் விநியோகம் தொடர்பான வர்த்தக அமைச்சின் பணிப்புரையின் பிரகாரம், நுகர்வோர் சேவை அதிகார சபையின் கண்காணிப்பு நடவடிக்கைகள் காரணமாக அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைந்துள்ளதாக அமைச்சின் செயலாளர் எஸ்.டி.கொடிகார தெரிவித்துள்ளார்.

இதுவரை பதினொரு வகையான அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு வர்த்தக அமைச்சு இறக்குமதியாளர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி ஒரு கிலோ எடையுள்ள பொருளை கொழும்பு

04

நாட்டை சுபீட்சத்திற்கு இட்டுச் செல்லும் திறமை இருப்பதாக

## ஜனாதிபதி ரணிலுக்கு எகிப்து ஜனாதிபதி பாராட்டு



இலங்கையை முன்னேற்றம் மற்றும் சுபீட்சத்திற்கு இட்டுச் செல்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ள

04



பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க

# விசேட பொருளாதார அபிவிருத்தி குழுவை நியமிக்க அரசு முடிவு



### குழுவிற்கு தலைவராக தம்மிக பெரேரா MPயை நியமிக்க உத்தேசம்

லோரன்ஸ் செல்வநாயகம்

**பொருளாதார கொள்கை ஒன்றை உருவாக்கி திட்டமிட்டு அதனை நடைமுறைப்படுத்தும் அதிகாரத்தை குறித்த குழுவுக்கு வழங்கவும் அரசு தீர்மானம்**

சுதந்திரத்தின் பின்னர் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காக விசேட பொருளாதார அபிவிருத்தி குழுவொன்றை உருவாக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உருவாக்கப்படவுள்ள உத்தேச அபிவிருத்தி குழுவின் தலைவராக பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரும் பிரபல வர்த்தகருமான தம்மிக பெரேராவை நியமிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை கட்டியெழுப்புவதற்கு தேவையான பொருளாதார கொள்கையொன்றை திட்டமிடுதல், அதனை நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல் ஆகிய முக்கிய பொறுப்புக்கள் மேற்படி குழுவுக்கு ஒப்படைக்கப்படவுள்ளதாக நிதியமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

04

கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரது வீட்டில்

## 2 கோடி ரூபா நகைகளும் ஒருதொகை பணமும் கொள்ளை



### கொட்டாஞ்சேனையில் பட்டப்பகலில் கொள்ளையர் கைவரிசை

லோரன்ஸ் செல்வநாயகம்

கொழும்பு கொட்டாஞ்சேனை சென். பெனடிக்ற் மாவத்தையிலுள்ள கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரின் வீட்டில் நேற்று பட்டப்பகலில் சுமார் இரண்டு கோடி ரூபா பெறுமதியுள்ள தங்க நகைகள் மற்றும் ஒரு தொகை பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளது. நேற்று முற்பகல் மேற்படி வீட்டிற்குள் புகுந்துள்ள இனந்தெரியாத இரு நபர்கள் வீட்டிலுள்ளோரை அச்சுறுத்தி நகைகளையும் பணத்தையும் கொள்ளையிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த வீட்டிலிருந்து ஒன்றரைக் கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுள்ள

04

## சர்வகட்சி அரசுக்கு சஜித் ஒத்துழைக்க வேண்டும்!



அஸாத் சாலி பகிரங்க வேண்டுகோள்

03

## 246 ரூபாவால் சமையல் எரிவாயு விலை நேற்று முதல் குறைப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

சமையல் எரிவாயுவின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் குறைவடைந்துள்ளதாக லிற்றோ கேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க 12.5 கிலோ கிராம் எடையுள்ள சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை 246 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 5 கிலோ கிராம் எடையுள்ள சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 99 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் 2.3 கிலோகிராம் எடையுள்ள சமையல் எரிவாயுவின்

04

## ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு மிதக்கும் சந்தையில் இடம்

### திறமைகளை வெளிப்படுத்தும் மையமாக உருவாக்க யோசனை



ஆர்ப்பாட்டக்காரர்களின் தேவைகளை அரசாங்க அனுசரணையுடன் முன்னெடுக்கும் வகையில் கொழும்பு கோட்டை மிதக்கும் சந்தை

04

## ஜனாதிபதியுடன் பேச்சு நடத்த கஜேந்திரகுமார் நிபந்தனை



### சம்மதித்தால் மட்டுமே சந்திப்பேன் என்கிறார்

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் விடுதலை செய்யப்பட வேண்டும் மற்றும் அவசரகாலச் சட்டம் ரத்துச் செய்யப்படும் வரை ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தையில்

04

## ஜோசப் ஸ்டாலின் பிணையில் விடுவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

நீதிமன்ற உத்தரவை மீறி செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின்

04



மலையகத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழையால் பாதிக்கப்பட்ட நாவலப்பிட்டி மற்றும் கண்டி பகுதிகளுக்கு ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன நேரடியாக விஜயம் செய்து நிலைமைகளை பார்வையிட்டார். அமைச்சருடன் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அலுத்கமகேயும் அனர்த்த பகுதிகளுக்கு செல்வதை படத்தில் காணலாம்.

## நாட்டின் மனித உரிமைகள் குறித்த உண்மை நிலை என்ன?



### ஆராய ஐ.நா மனித உரிமை குழு அடுத்த மாதம் வருகிறது

இலங்கையில் தேசிய அரசாங்கத்தை அமைக்கும் முயற்சிகள் மும்முரமாக சென்று கொண்டிருக்கையில், மனித உரிமைகளின் உண்மை நிலையை தெரிந்து கொள்வதற்காக ஜெனீவாவை தளமாகக் கொண்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்மட்ட குழு, அடுத்த மாதம் முதல் வாரத்தில் கொழும்பிற்கு வரவுள்ளது. மனித உரிமைகளுக்கான உயர்

04

மழை, மண்சரிவு காரணமாக தடைப்பட்டிருந்த

## மலையக ரயில் சேவைகள் இன்று முதல் வழமைக்கு

### ரயில்வே திணைக்களம் நேற்று அறிவிப்பு



மலையக ரயில் சேவை இன்று (09) செவ்வாய்க்கிழமை முதல் மீண்டும் வழமைக்கு திரும்பும் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலையின்

04



## பஸ்கள், கார்களுக்கு மேலதிக எரிபொருள்

ஒதுக்கீடு செய்ய அமைச்சர் தீர்மானம்

03

நாடு முழுவதிலும் விரைவில்

## 50 மேலதிக IOC எரிபொருள் நிரப்பு நிலையங்கள்

03



மக்களது மனங்களை குழப்பும் வகையில்

## தமிழ் கூட்டமைப்பினுள் மூன்று கறுப்பாடுகள்



### அனுமதிக்க முடியாது என்கிறார் செல்வம் MP

தமிழ் தேசிய கூட்டமைப்பு பலமாக இருந்தது இருக்கின்றது. ஆனால் இரண்டு மூன்று கறுப்பாடுகளுடைய செயல்பாடுகளால்

04

## குறுகிய கால பகுதியினுள் அதிகரித்துள்ள தொற்றாளர்

### கொவிட் 19 குறித்து PHI சங்கம் எச்சரிக்கை



நாட்டில் குறுகிய காலப் பகுதியில் கொவிட் 19 தொற்று அறிகுறிகளுடன் அதிக எண்ணிக்கையானோர் இனங்காணப்பட்டுள்ளனர். மேலும் நாட்டின் தற்போதைய சூழ்நிலை மிகவும் அபாயகரமானதாக உள்ளது. இது

04

## பளு தூக்கல் போட்டியில் மூன்று புதிய சாதனைகள்

### தேசிய ரீதியில் சாதித்த யாழ். இளைஞர்



தேசிய ரீதியான பளு தூக்கல் போட்டியில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞர் புதிய சாதனைகளை படைத்துள்ளார்.

தேசிய ரீதியில்

04

காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டம்;

## மற்றுமொரு முக்கிய செயற்பாட்டாளர் கைது



காலிமுகத்திடல் போராட்டக்களத்தின் முக்கிய செயற்பாட்டாளரான பியத் பிகேசல, கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகியிருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் மீது ஜனாதிபதி

04

இலங்கைத் தமிழரின்

## மொழிப்புலமையை புகழ்ந்து பேசிய நடிகர் நாசர்



நீங்கள் பேசுகின்ற தமிழ் என் காதில் பாடல் போல் ஒலிக்கிறது என இலங்கைத் தமிழர்களின் மொழிப் புலமையை தென்னிந்திய திரைப்பட நடிகர் நாசர் புகழ்ந்து பேசியுள்ளார்.

04




# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் விசேட கவனம்

## நாவலப்பிட்டி மக்களுக்கு அமைச்சர் பந்துல உறுதி

ஹற்றன் சுழற்சி நிருபர்





மலையகத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழையால் பல பகுதிகள் பாரிய சேதங்களை எதிர்க் கொண்டுள்ளது.அத்தோடு,தோட்டங்களில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பாலங்கள் வெள்ளத்தின் அள்ளுண்டு செல்லப்பட்டமையால் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

இவ்வாறு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்காக பெருந்தெருக்கள், போக்குவரத்து மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன நாவலப்பட்டி பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவின் அழைப்பின் பேரில் அப்பகுதிக்கு விஜயம் செய்த அமைச்சர் பந்துல குணவர்தன, நாவலப்பிட்டி இங்குரு ஓயா பாலம் இடிந்து வீழ்ந்ததன் காரணமாக இங்குரு ஓயா பகுதிக்கு செல்ல முடியாத நிலை குறித்து மக்களிடம் கேட்டறிந்தார். இவ்விஜயத்தின் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்தன. நாவலப்பிட்டி பிரதேசம் வெள்ளத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், வெள்ளத்தினால் பல உயிர்கள் பலியாகியுள்ளதாகவும், அங்கு வாழ்ந்த மக்களின் பல வீடுகள் வெள்ளத்தினால் அழிந்துள்ளதாகவும் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கலந்துரையாடி பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை விசேட தேவையாக கருதி தீர்வு காண நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

# ஸ்ரீ தலதா மாளிகையில் ஆதிவாசிகளால் தேன் பூஜை



(அக்குறணை குறூப் நிருபர்)

கண்டியின் வரலாற்றுச் சிறப்புமிக்க எசல பெரஹராவின் முதலாவது ரந்தோலி பெரஹரா தினம் சம்பிரதாய பூர்வ தேன் காணிக்கை (தேன் பூஜை) தம்பானே ஆதிவாசிகளால் மேற்கொள்ளக்கொள்ளப்பட்டது.

வரலாற்று சிறப்பு மிக்க ஸ்ரீ தலதா மாளிகைக்கு 30 பேரடங்கிய ஆதிவாசிகள் குழு கண்டிக்கு விஜயம் செய்து தேன் பூஜையை செய்தனர். ஆதிவாசி தலைவர் ஊருவரிகே வன்னியலத்தோ 26ஆவது முறையாக இந்த பூஜையை மேற்கொண்டதாக அவர் தெரிவித்தார்.

வரலாற்றுக்காலம் முதல் ஒவ்வொரு காலகட்டத்திலும் பழங்குடி தலைவர்கள் இந்த தேன் பூஜையை மிகுந்த பய பக்தியுடன் பெரஹராவின், போது செய்துவந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிறுத்தைபுலி உயிரிழந்த சம்பவம்

# குற்றம் நிரூபிக்கப்பட்டால் அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

(ஹற்றன் சுழற்சி நிருபர்)



ஹற்றன், டிக்கோயா வனராஜா சமர்ஹில் தோட்டப்பகுதியிலுள்ள மரமொன்றில் ஏறிய நிலையில் உயிரிழந்த சிறுத்தைபுலியின் மரணம் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு விவசாய, வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர, அமைச்சின் செயலாளர் சந்திரா ஹேரத்துக்கு நேற்று (08) பணிப்புரை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் (07.08.2022) ஹற்றன் டிக்கோயா சமர்ஹில் தோட்ட பகுதியிலுள்ள மரக்கறி தோட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த வலையில் சிக்கி காயமடைந்த சிறுத்தை காயத்துடன் கம்பியில் அகப்பட்டவாறே மரத்தில் ஏறியுள்ளது.

இதனையடுத்து, சிறுத்தையை உயிருடன் பிடிக்கும் நடவடிக்கையில், நல்லதண்ணி வனவிலங்குகள் அலுவலக அதிகாரிகள் மற்றும் பொலிஸார் நடவடிக்கை எடுத்ததுடன், சிறுத்தை ஏறிய மரத்தை வெட்டியுள்ளனர். இதன்போது சிறுத்தையின் மீதே மரம் விழுந்தமையால் சிறுத்தை உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இவ்விடயம் தொடர்பில் உடனடியாக ஆராய்ந்து, உரிய அதிகாரிகளின் அலட்சியத்தால் சிறுத்தைபுலி உயிரிழந்தமை உறுதி செய்யப்பட்டால், வனவிலங்கு அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு செயலாளருக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார். இச்சம்பவம் தொடர்பான விசேட விசாரணைகளுக்காக மேலதிக செயலாளர் அடங்கிய குழுவொன்று ஹற்றன் டிக்கோயா சமர்ஹில் தோட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் சந்திரா ஹேரத் அமைச்சருக்கு அறிவித்துள்ளார்.

# குளவிக் கொட்டுக்கு இலக்கான மூவர் வைத்தியசாலையில் அனுமதி

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

மஸ்கெலியா சமனெளிய சிங்கள பாடசாலையில் நேற்று மதியம் குளவிக் கொட்டுக்கு இலக்கான மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதில் இரண்டு மாணவர்கள் உட்பட ஆசிரியர் ஒருவரும் அடங்குவர்.

நேற்று காலை கடும் காற்று காரணமாக அப்பகுதியில் கட்டப்பட்டிருந்த குளவிக் கூடு கலைந்து பாடசாலையிலிருந்த மாணவர்கள், ஆசிரியர்களை குளவி தாக்கியுள்ளது. இதனையடுத்து மாணவர்களும் ஆசிரியரும் மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். குளவிக் கொட்டுக்கு இலக்காகாமல் ஏனைய மாணவர்களுக்கு உடன் விடுமுறை வழங்கி காப்பாற்றியுள்ளனர்.

# பொலிஸ் உத்தியோகத்தரின் கைவிரலை கடித்த பெண் கைது

(எம்.ஏ.அமீனுல்லா)

எசல பெரஹர உற்சவத்தின் போது கடமையாற்றிய பேராதனை பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பொறுப்பதிகாரி மீது குழுவினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். தாக்குதலின் போது தாக்குதல் நடத்திய குழுவிலுள்ள பெண் ஒருவர் பொலிஸ் பொறுப்பதிகாரியின் கை விரலை கடித்ததால், கண்டி தேசிய வைத்தியசாலையில் அவருக்கு இரண்டு தையல்கள் போடப்பட்டுள்ளன.

குடிபோதையில் தவறாக நடந்து கொண்ட ஒரு குழுவில் இருந்த பெண்ணும் மற்றுமொரு நபரும் சேர்ந்து இந்த தாக்குதலை நடத்தியுள்ளதாக தெரியவந்துள்ளது. பேராதனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பிரதான பொலிஸ் பரிசோதகர் சரத் விஜேசிங்கவே இவ்வாறு சம்பவத்தின் பொழுது காயமடைந்துள்ளார்.

பெண்ணால் கடித்து தாக்கப்பட்ட நிலையில், பிரதான பொலிஸ் பரிசோதகர் கண்டி தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாகவும் குறித்த சம்பவம் தொடர்பில் குறித்த பெண்ணுடன் மேலும் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். சந்தேகநபர்கள் கண்டி, அகவத்த பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

# கண்டி மஹய்யாவயில் போதைபொருள் கண்டுபிடிப்பு

(எம்.ஏ.அமீனுல்லா )

கண்டியில் தற்பொழுது இடம்பெற்று வரும் எசல பெரஹர உற்சவத்தின் போது அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக 5370 மில்லிகிராம் போதைபொருளை கொண்டு வந்த நபரை கண்டி பொலிஸ் ஊழல் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகள் குழு கைது செய்துள்ளது.

கண்டி மஹய்யாவ பிரதேசத்தை சேர்ந்த சந்தேக நபர் கொழும்பில் இருந்து கண்டிக்கு வந்து கொண்டிருந்த போது பேராதனை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபரின் சகோதரி மத்துக்கடு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தற்போது சிறையில் உள்ளதாகவும் அவரது மகனும் இதேபோன்ற வழக்கில் தண்டனை பெற்று விடுதலையாகியுள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சந்தேகநபர் எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# 100 நாட்கள் கொண்ட பெற்றோர் விடுமுறையை அறிமுகம் செய்யும் ஜோன் கீல்ஸ்



ஜோன் கீல்ஸின் பன்முகத்தன்மை, சமபங்கு மற்றும் உள்ளடக்கத்தை வலுப்படுத்துவதற்கான மற்றொரு குறிப்பிடத்தக்க முயற்சியை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். வன் ஜேகேஎச் இன் சமீபத்திய முன் முயற்சியானது 2 ஆகஸ்ட் 2022 முதல் பெற்றோர் விடுப்பு என சமமான மகப்பேறு மற்றும் தந்தை வழி விடுப்பு நாட்களை அறிமுகப்படுத்துவதாகும்.

குழந்தை பிறக்கும் போது அல்லது தத்தெடுக்கப்படும் போது 100 நாட்கள் மகப்பேறு விடுப்பை குழுமம் தொடர்ந்து வழங்கும் அதே வேளையில், 5நாட்களுக்கு வழங்கப்படும் தந்தைவழி விடுப்பானது இரு பெற்றோரின் பங்குகளின் சம பங்களிப்பை உறுதி செய்வதற்காகவும் மற்றும் ஆரம்பகால குழந்தை பராமரிப்பில் இருவரினதும் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் விதமாகவும் 100 நாட்களாக அதிகரிக்கப்படும்.

மேலும், ஒவ்வொரு குடும்பமும் தங்களின் குழந்தை அல்லது குழந்தைகளின் பிறப்பின் போது தனித்துவமான சூழ்நிலைகளைக் கொண்டிருக்கலாம் என்பதை குழுமம் புரிந்துகொண்டுள்ளதால், ஒரு ஊழியர் 100 நாட்கள் பெற்றோர் விடுப்பை எவ்வாறு பெறலாம் என்பதில் நெகிழ்வுத்தன்மை கட்டமைக்கப்பட்டுள்ளது.

இந்தமுயற்சி குறித்து ஜோன் கீல்ஸ் குழுமத்தின் தலைவர் கிரிஷான் பாலேந்திரா 'சமஎண்ணிக்கையிலான மகப்பேறு மற்றும் தந்தை வழிவிடுப்பு நாட்களை வழங்குவதற்கான மற்றொரு முக்கிய நோக்கம், மகப்பேறு விடுப்பின் சாத்தியமான நிகழ்வுகளின் காரணமாக, வேலைக்கு பெண்களைச் சேர்ப்பதில் தொடர்புடைய பாகுபாட்டை அகற்றுவதாகும். குழுமத்தின் 5 ஆண்டுகால இலக்கான 40%பெண்களை பணியமர்த்ததுவதில் அடைவதன்மூலம், ஜோன்கீல்ஸ் குழுமத்திற்குள் ஒருநபரின்தொழில் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் பாலின சார்புகளை நாம்நிவர்த்தி செய்வது இன்றியமையாததாகும்.' எனக் கூறினார்.

# உலகின் முன்னணி ஆயிரம் வங்கிகள் வரிசையில் தொடர்ந்து இடம்பிடித்துள்ள கொமர்ஷல் வங்கி

The Banker
TOP 1000
WORLD BANKS 2022

உலக கௌரவத்துக்குரிய ஐக்கிய இராச்சியத்தின் சஞ்சிகையான 'த பேங்கர்' சஞ்சிகை தனது கீர்த்திமிக்க உலகின் முன்னணி ஆயிரம் வங்கிகள் வரிசையில் கொமர்ஷல் வங்கியை மீண்டும் இணைத்துள்ளது. இதன் மூலம் உலகப் புகழ் பெற்ற ஆயிரம் வங்கிகள் வரிசையில் தொடர்ந்து 12வது வருடமாக இணைந்து கொள்ளும் இலங்கையின் ஒரேயொரு வங்கி என்ற பெருமையை கொமர்ஷல் வங்கி பெற்றுக் கொள்கின்றது.

உலக வங்கிகளின் இந்த தர வரிசையானது முதல் நிலை மூலதனத்தை அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றது. ஒரு வங்கியின் ஆரோக்கியத்தை மதிப்பீடு செய்யும் அடிப்படை முதல்தர குறிகாட்டியாக இது கருதப்படுகின்றது.

'இரண்டு வருடங்களாக நீடித்த கொவிட்19 நோய்ப்பரவல் நிலையின் தொடர்ச்சியான தாக்கம் காரணமாக ஏற்பட்டுள்ள பிரத்தியேகமான பாதிப்புக்கள் காரணமாக இலங்கையில் வங்கிகள் தமது நினைவில் வைத்திருக்க வேண்டிய மிகவும் கஷ்டமான காலப்பகுதி இதுவாகும். அந்த வகையில் தொடர்ந்து 12வது வருடமாகவும் உலகின் தலை சிறந்த ஆயிரம் வங்கிகள் வரிசையில் இடம்பிடித்துள்ள எமது சாதனை மிகவும் முக்கியமான ஒன்றாகக் கருதப்பட வேண்டியதாகும்" என்று கூறினார் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க.

"வங்கியின் குறிப்பிடத்தக்க நிலைத்தன்மையை இது மீண்டும் உறுதிப்படுத்துவதோடு வெளிக்காரணிகளால் ஏற்படும் அச்சுறுத்தல் மிக்க சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய உறுதியான அடிப்படைகளை தொடர்ந்து பேணும் ஆற்றலும் அதற்கு உள்ளது என்பதையும் உறுதிப்படுத்துவாக இது அமைந்துள்ளது" என்று அவர் மேலும் கூறினார்.




# செலான் வங்கி பணிப்பாளர் சபை அங்கத்தவராக லக்ஷ்மன் சில்வா நியமனம்



செலான் வங்கி பிஎல்சியின் சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக லக்ஷ்மன் சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

துறையில் பெருமளவு அனுபவம் படைத்தசில்வா, மூன்று தசாப்த காலப் பகுதிக்கு மேலாக DFCC வங்கி பிஎல்சி மற்றும் அதன்துணை நிறுவனங்களுக்கு பெறுமதி வாய்ந்த சேவைகளை வழங்கியிருந்தார்.

இவர் இலங்கை வங்கிகள் சம்மேளனத்தின் தவிசாளராகவும் சேவையாற்றியிருந்ததுடன், 2020/21 காலப்பகுதியில் நிலவிய நெருக்கடிகளுக்கு மத்தியில் வங்கியியல் சமூகத்துக்கு வழிகாட்டல்களை வழங்கியிருந்தார்.

## Aluminum Stewardship திட்டத்திற்காக

# அர்ப்பணிக்கப்பட்ட இலங்கையின் முதலாவது நிறுவனமாகும் Alumex



இலங்கையின் முன்னணி முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட அலுமினிய உற்பத்தியாளரும், Haleys குழுமத்தின் அங்கத்தவருமான Alumex, உற்பத்தி மற்றும் உருமாற்றப் பிரிவின் புதிய உறுப்பினராக Aluminium Stewardship முன்முயற்சி (ASI) வேலைத் திட்டத்தில் இணைந்துள்ளது.

ASI என்பது ஒரு இலாப நோக்கற்ற தரநிலை அமைப்பு மற்றும் சான்றிதழ் அமைப்பாகும், இது ஒரு நிலையான சமுதாயத்திற்கு அலுமினியப் பொருட்களின் பங்களிப்பை மேம்படுத்த உறுதிபூண்டுள்ள உற்பத்தியாளர்கள், பாவனையாளர்கள் மற்றும் பங்குதாரர்களை மதிப்பீடு செய்கிறது. இந்த தரநிலைகளை பின்பற்றும் முதல் இலங்கை உற்பத்தியாளர் என்ற வகையில், பொறுப்பானஉற்பத்தி, ஆதாரம் மற்றும் பொறுப்பேற்பை வளர்ப்பதற்கு உறுப்பினர்களுடன் இணைந்து அலுமெக்ஸ் நடவடிக்கை எடுக்கும்.

"இலங்கையின் மிகப் பெரிய அலுமினிய உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளர் என்ற வகையில், எமது வர்த்தகம் மற்றும் உற்பத்தி செயல்முறைகளில் பேண்தகைமையை ஒருங்கிணைப்பதன் முக்கியத்துவத்தை நாங்கள் நன்கு அறிவோம். வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மைக்கான எங்கள் உறுதிப்பாட்டை வலுப்படுத்துவதன் மூலம் நாங்கள் எப்போதும் ASI திட்டத்தை ஆதரிக்கிறோம். இது இலங்கை மக்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் மத்தியில் வேகமாக விரிவடைந்து வரும் எமது ஏற்றுமதிச் சந்தைக்கும் அடிப்படையில் முக்கியமானது என நாங்கள் நம்புகின்றோம்." என Alumexஇன் முகாமைத்துவப் பணிப்பாளர் பிரமுக் தெதிவல தெரிவித்தார்.

## Kalmar உடன் இணைந்து

# உள்நாட்டு கொள்கலன் முனைய செயற்பாடுகளை மேம்படுத்தும் DIMO



இலங்கையின் முன்னணியிலுள்ள பல்வகைப்பட்ட கூட்டு நிறுவனமான DIMO நிறுவனமானது, துறைமுகங்கள் மற்றும் உள்நாட்டு கொள்கலன் முனைய இயந்திரமயமாக்கல் மற்றும் வலுசக்தித்திறனுள்ள கொள்கலன் கையாளுகை தீர்வுகள் ஆகியவற்றில் உலகளாவிய தொழில்துறை முன்னோடியான Kalmar நிறுவனத்துடன் இணைந்து, உள்ளூர் கொள்கலன் முனைய நடவடிக்கைகளை அடுத்த கட்டத்திற்கு முன்னேற்றவும் மேம்படுத்தவும் தயாராகியுள்ளது. இந்த கூட்டாண்மையானது, தாங்கள் சேவையாற்றும் சமூகங்களின் கனவுகள் மற்றும் அபிலாஷைகளை தொடர்ச்சியாக ஊக்குவிப்பதற்கான DIMO நிறுவனம் கொண்டுள்ள அர்ப்பணிப்பையும், நாட்டின் பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குவதற்கான அதன் அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கிறது.

2018 ஆம் ஆண்டு முதல் Kalmar நிறுவனத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட முகவராக உள்ள DIMO, தனது பெறுமதி சேர் சேவைகள் மற்றும் இணையற்ற விற்பனைக்குப் பின்னரான ஆதரவுகள் ஆகியவற்றுடன், Kalmar இன் பரந்துபட்ட தயாரிப்பு வகைகளை வழங்குவதன் மூலம் நாட்டின் கொள்கலன் செயற்பாடுகளுக்கு DIMO தனது ஆதரவை வழங்கி வருகிறது. Kalmar நிறுவனம், துறைமுகங்கள், முனையங்கள், விநியோக மையங்கள் மற்றும் கனரக தொழில்துறைகளுக்கான சரக்கு கையாளுகை தொடர்பான தீர்வுகளை வழங்குகிறது. உலகிலுள்ள நான்கு கொள்கலன்களில் ஒன்றின் கையாளுகை, Kalmar Solution நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகிறது. அதன் விரிவான தயாரிப்பு வகைகள், பரந்த உலகளாவிய வலையமைப்பு மற்றும் வெவ்வேறு முனைய செயன்முறைகளின் ஒருங்கிணைப்பை செயல்படுத்தும் திறன் ஆகியவற்றின் மூலம், Kalmar அதன் ஒவ்வொரு கொள்கலன் நடவடிக்கையிலும் அது தொடர்பான செயற்றிறனை மேலும் மேம்படுத்துவதில் கவனம் செலுத்தி வருகிறது.

# ஏழு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு

### மக்களை அவதானமாக இருக்க வேண்டுகோள்



சீரற்ற காலநிலை காரணமாக ஏழு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் வலஸ்முல்ல பிரதேச செயலக பிரிவு, கேகாலை மாவட்டத்தின் யட்டியாந்தோட்டை மற்றும் அரநாயக்க பிரதேச செயலக பிரிவுகள், மாத்தறை மாவட்டத்தின் வஸ்கடுவ பிரதேச செயலக பிரிவு, நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ மற்றும் கொத்மலை பிரதேச செயலக பிரிவுகள், இரத்தினபுரி மாவட்டத்தின் 04



அரச துறை மனித வள அபிவிருத்தி புலமைப்பரிசில் திட்டம் தொடர்பில் இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் சார்பில் ஜப்பான் தூதுவர் மசுகொசியும் நிதி அமைச்சு சார்பில் அமைச்சின் செயலாளர் கே.எம்.எம். சிறிவர்தனவும் கைச்சாத்திடுவதை காணலாம்.

## கிளைபோசெற் கிருமிநாசினி இறக்குமதிக்கான தடை நீக்கம்?

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கிளைபோசெற் கிருமிநாசினியை நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்குவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது. அதற்கான வர்த்தமானி பத்திரிகை வெளியிடப்படவுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

கிளைபோசெற் உள்ளிட்ட பல கிருமிநாசினிகள் விவசாய உர வகைகள் சிலவும் இறக்குமதி செய்வதற்கு அரசாங்கத்தினால் 2014 ஆம் ஆண்டு முதல் தடை 04

## கலவரத்தை தூண்டியதாக ஐ.ம.ச அமைப்பாளர் கெஸ்பேவயில் கைது




கடந்த மே மாதம் 09 ஆம் திகதி இடம்பெற்ற கலவரச் சம்பவங்களுடன் தொடர்பு இருப்பதாக சந்தேகத்தின் பேரில் ஐக்கிய மக்கள் சக்தியின் கெஸ்பேவ தொகுதி அமைப்பாளர் கயான் டி மெல் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிலியந்தலை பொலிஸார் விடுத்த அறிவித்தலின் பிரகாரம், சந்தேகநபர் நேற்று (08) காலை சட்டத்தரணி ஊடாக பொலிஸில் சரணடைந்துள்ளதாக 04

## ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாதம் இன்று

### வரவு செலவுத் திட்ட திருத்தச் சட்டமூலம், 22வது திருத்த சட்ட மூலம் சபையில் சமர்ப்பிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய கொள்கை விளக்க உரை தொடர்பில் இரண்டு நாள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் இன்றும் நாளையும் பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ளன.

இன்று காலை 10 மணிக்கு இந்த விவாதம் ஆரம்பமாவதுடன் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்திற்கான யோசனையை முன்வைத்து முதலாவது உரையை எதிர்க்கட்சியின் பிரதம கொரடா 04

## ஜனாதிபதி- ஜே.வி.பி இடையில் இன்று சந்திப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்களுக்குமிடையிலான கலந்துரையாடல் இன்று (09) பிற்பகல் நடைபெறவுள்ளது. சர்வகட்சி அரசாங்கம் அமைப்பது தொடர்பில் ஏற்கனவே பல கட்சிகளை ஜனாதிபதி சந்தித்துள்ளதோடு ஜே.விபியுடன் இன்று முதலாவது சந்திப்பு நடைபெறுகிறது. சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கு ஆதரவளிக்கப் போவதில்லை என அக்கட்சி ஏற்கனவே அறிவித்துள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி, புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி அரசாங்கத்தை அமைத்து முடித்துவிட்டார். 04

### உலக தர வரிசை பல்கலைக்கழகம்;

## இலங்கையில் கொழும்பு வளாகம் முதலாமிடத்தில் உலகில் "ஹார்வார்டு" முன்னிலையில்



உலக பல்கலைக்கழகங்களின் 'வெபோமெட்ரிக்ஸ்' தரவரிசையின் படி இலங்கைப் பல்கலைக்கழகங்களில் கொழும்புப் பல்கலைக்கழகம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

இதற்கமைய,ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் இரண்டாமிடத்தையும், பேராதனை பல்கலைக்கழகம் மூன்றாமிடத்தையும், மொரட்டுவ பல்கலைக்கழகம் நான்காவது இடத்தையும் பெற்றுள்ளன. இந்த வரிசையில், ருஹுணு, களனி, ரஜரட்டை, யாழ்ப்பாணம், வடமேற்கு, கிழக்கு, சப்ரகமுவ மற்றும் திறந்த பல்கலைக்கழகம் முறையே ஐந்தில் இருந்து 12வது இடத்துக்கு 04

## கடற்படை, விமானப் படையினருக்கு ஆஸி. அரசு எரிபொருள் அன்பளிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடியை கருத்திற்கொண்டு அவுஸ்திரேலிய அரசாங்கமானது இலங்கையின் விமானப்படை மற்றும் கடற்படையினருக்கு இலவசமாக ஒருதொகை எரிபொருளை வழங்கியுள்ளது.

அதற்கிணங்க, கடல் ரீதியாக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை தடையின்றி தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு வசதியாக 450 மெற்றிக் தொன் எரிபொருளை கடற்படையினருக்கும் அத்துடன் 27,000 லீற்றர் எரிபொருளை விமானப் படையினருக்கும் இலவசமாக வழங்கியுள்ளதாக கடற்படை தலைமையக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடியை கருத்திற்கொண்டு கடல் ரீதியாக இடம்பெறும் குற்றச் செயல்களை தடுக்கும் நடவடிக்கைகளுக்காக கடற்படையினருக்கும் விமானப்படையினர் 04

## பஸ்கள், கார்களுக்கு மேலதிக எரிபொருள்

### ஒதுக்கீடு செய்ய அமைச்சர் தீர்மானம்



பஸ்கள் மற்றும் கார்களுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்கவுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர உறுதியளித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ்கள் மற்றும் கார்களின் தேவைகளை கண்டறியும் கலந்துரையாடல் நேற்று காலை போக்குவரத்து அமைச்சில் இடம்பெற்றதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்த சந்திப்பின் போது போக்குவரத்து ஆணைக்குழுவின் மூலம் ஒவ்வொரு வகைக்கும் எரிபொருள் தேவைகளை அடையாளம் காண தீர்மானிக்கப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அறிக்கை கிடைத்தவுடன் அமைச்சு அடுத்த வாரத்திற்குள் தனி QR குறியீட்டில் மேலதிக 04




ஆர்ப்பாட்டக்காரர்களின் கைது மற்றும் அரச அடக்குமுறைக்கு எதிராக ஏற்பாடு செய்யப்பட்ட அமைதி ஆர்ப்பாட்டம் புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக நேற்று நடைபெற்றது. மதத் தலைவர்கள் பங்கேற்ற அமைதி ஆர்ப்பாட்டத்தின் போது பிடிக்கப்பட்ட படம்.

படம்: வாசித்த பட்டபெந்திக்கே

## நாடு முழுவதிலும் விரைவில் 50 மேலதிக IOC எரிபொருள் நிரப்பு நிலையங்கள்

நாடு முழுவதும் விரைவில் 50 மேலதிக எரிபொருள் நிரப்பு நிலையங்களை அமைக்கவுள்ளதாக லங்கா IOC நிறுவனம் அறிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு லங்கா IOC நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் இதனை தெரிவித்தார். நாட்டில் உள்ள மொத்த எரிபொருள் நிலையங்களில் மூன்றில் ஒரு பகுதிக்கும் குறைவாக எரிபொருள் நிரப்பு நிலையங்களே IOC நிறுவனத்தின் கீழ் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நாடளாவிய ரீதியாக வாடகை வாகனங்களுக்காக QR குறியீட்டு முறைமையொன்றை அறிமுகப்படுத்தி அதனூடாக அனைத்து எரிபொருள் நிலையங்களிலும் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை அடுத்து வரும் வாரத்தில் ஆரம்பிக்கவுள்ளதாக எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

## சர்வகட்சி அரசுக்கு சஜித் ஒத்துழைக்க வேண்டும்!

### அஸாத் சாலி பகிரங்க வேண்டுகோள்



ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையை வாழ்த்திய பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள் சகலரும் சர்வகட்சி அரசாங்கத்தைக் கொண்டு செல்வதற்கான ஒத்துழைப்புக்களை ஜனாதிபதிக்கு வழங்க வேண்டும் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும், மேல்மாகாண முன்னாள் ஆளுநருமான அசாத் சாலி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் நடாத்திய செய்தியாளர் சந்திப்பிலே இந்த வேண்டுகோளை அசாத் சாலி விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாணும் தீர்க்கதரிசனம் ஜனாதிபதியின் உரையிலுள்ளதாக சகல கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாழ்த்தியுள்ளனர். இதை, வாழ்த்தியுள்ள சஜித் பிரேமதாச, நடைமுறைக்குச் 04

## மேல், சப்ரகமுவ,வடமேல் மாகாணங்களில் அடிக்கடி மழை பெய்யும் சாத்தியம்

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அடிக்கடி மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் தென் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.



நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக் கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 3040 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசந்துறை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் மாத்தறையிலிருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 5060 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசந்துறை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் மாத்தறையிலிருந்து பொத்துவில் வரையான 04




## விசேட பொருளாதார அபிவிருத்தி...

மாதாந்தம் 800 க்கும் 900 க்கும் இடைப்பட்ட அமெரிக்க டொலர் வருமானமாக கிடைத்து வந்துள்ள எமது நாட்டின் தற்போதைய நிலையில் அந்த தொகை 250 க்கும் 300க்கும் இடைப்பட்ட தொகையாக குறைவடைந்துள்ளது. அதனை தெளிவுபடுத்திய அந்த அதிகாரி புதிய அபிவிருத்திக் குழுவின் முக்கிய செயற்பாடு முடிந்தளவு நாட்டிற்கு வெளிநாட்டு செலாவணியை கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு நடுநிலை வகிப்பதே என்றும் அவர் தெரிவித்துள்ளார். புதிய அபிவிருத்தி குழுவின் தலைவருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரொருவருக்குள்ள அதிகாரம் மற்றும் வசதிகள் வழங்கப்படுவதுடன் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான நேரடி பங்களிப்பை அவர் வழங்கும் வகையில் அனைத்து வாய்ப்புகளையும் அவருக்கு வழங்க அரசாங்கம் தயாராகவுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

## ஏழு மாவட்டங்களுக்கு... (03 ஆம் பக்கத் தொடர்)

இம்புல்பே, கலவான, கஹவத்தை, குருவிட்ட மற்றும் நிவித்திகல பிரதேச செயலக பிரிவுகளுக்கு இரண்டாம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மேலும் சில பகுதிகளுக்கு முதலாம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, சப்ரகமுவ மாகாணத்திலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் இடைக்கிடையே மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. மேலும், மேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழை பெய்யுமென திணைக்களம் தெரிவித்துள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும் வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களிலும் காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீட்டர் வரை அதிகரித்துக் காணப்படுமென வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் கூறியுள்ளது.

## கிளைபோசெற்... (03 ஆம் பக்கத் தொடர்)

விதிக்கப்பட்டிருந்தது. மேற்படி கிருமிநாசினிகள் மனித உடலுக்கு பெரும் தீங்குகளை விளைவிக்கலாம் என பல்வேறு தரப்பினரும் தெரிவித்திருந்த கூற்றுக்களுக்கமையவே அவற்றுக்கான தடை விதிக்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது விவசாயிகளின் தேவைகளை கவனத்திற்கொண்டு சில கிருமிநாசினிகளுக்கான இறக்குமதித் தடையை நீக்குவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

## கலவரத்தை தூண்டியதாக... (03 ஆம் பக்கத் தொடர்)

தெரிவிக்கப்படுகின்றது. பின்னர் பொலிஸார் சந்தேக நபரை கைது செய்தனர்.

இதேவேளை, காலி முகத்திடல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மற்றுமொருவர் கொம்பனி தெரு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட இருப்பதாக அறிய வருகிறது.

## ஜனாதிபதியின் கொள்கை... (03 ஆம் பக்கத் தொடர்)

லக்ஷ்மன் கிரியெல்ல நிகழ்த்தவுள்ளார்.

கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நிகழ்த்தப்பட்ட கொள்ளை விளக்க உரை தொடர்பில் 3 நாள் விவாதம் நடத்த வேண்டும் என கட்சித் தலைவர்கள் பலரும் பாராளுமன்ற விவகாரம் தொடர்பான தெரிவுக்குழுக்கூட்டத்தில் சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். அதற்கிணங்கவே இரண்டு நாள் விவாதம் நடத்துவதற்கு அதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 3 ஆம் திகதி மேற்படி கொள்கை விளக்க உரையை பாராளுமன்றத்தில் ஆற்றியிருந்தார்.

அதேவேளை, வரவுசெலவுத்திட்ட திருத்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க தெரிவித்துள்ளார். அத்துடன் 22 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டமூலம் நாளை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. பாராளுமன்றம் இன்று பி.ப. 1.00 மணிக்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவின் கூடவுள்ளது. அதற்கிணங்க சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் பி.ப. 4..30 மணிக்கு நடைபெறவுள்ளது. பாராளுமன்றம் நாளை 10 ஆம் திகதி மற்றும் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆகிய தினங்களில் காலை 10 மணிமுதல் பி.ப. 430 மணி வரை கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி ஜே.வி.பி... (03 ஆம் பக்கத் தொடர்)

இப்போது சர்வகட்சி பேச்சுவார்த்தையில் எந்த பயனும் இல்லை. அந்த சர்வகட்சி அரசாங்கத்தில் நாங்கள் பங்கேற்க மாட்டோம் என அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கையில் கொழும்பு... (03 ஆம் பக்கத் தொடர்)

தரப்படுத் தப்பட்டுள்ளன. இந்த ஆண்டு ஜூலை மாதத்திற்கான இந்த தரவரிசை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு, அமெரிக்காவின் 'ஹார்வர்டு' பல்கலைக் கழகம், உலகின் சிறந்த பல்கலைக் கழகமாக முதலிடத்திலும், 'ஸ்டான் போர்ட்' பல்கலைக் கழகம் இரண்டாவது இடத்திலும் உள்ளன. கடந்த ஆண்டும் இந்த தரவரிசையில் இதே பல்கலைக்கழகங்கள் முதல் மற்றும் இரண்டாம் இடங்களைப் பிடித்திருந்தன. இலங்கையில் உள்ள கொழும்பு பல்கலைக்கழகம் உலக தரவரிசையில் 1531 வது இடத்தையும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகம் 1964 வது இடத்தையும், பேராதனை பல்கலைக்கழகம் 1974 வது இடத்தையும் பெற்றுள்ளது.

கடந்த வருடம் வெளியிடப்பட்ட தரவரிசையில் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் கொழும்புப் பல்கலைக்கழகம் முதலிடத்தைப் பெற்றிருந்ததுடன், உலகத் தரவரிசையின்படி 1591ஆவது இடத்தையும் பெற்றிருந்தது. அதன்படி இவ் வருடம் உலக தரவரிசையில் 30 இடங்கள் முன்னேறியுள்ளது.

## கடற்படை, விமானப்... (03 ஆம் பக்கத் தொடர்)

மேற்கொள்ளும் நடவடிக்கைகளை எந்தவித தடையுமின்றி முன்னெடுத்துச்செல்வதற்கு வசதியாக விமானப்படையினருக்கும் எரிபொருளை இலவசமாக வழங்கியுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. சட்டவிரோதமாகபெருமளவு நபர்கள் அவுஸ்திரேலியாவுக்கு தப்பிச் செல்லும் சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுவருகின்றது. கடற்படையினர் மேற்கொண்ட தொடர்ச்சியான நடவடிக்கைகள் காரணமாக அவ்வாறு அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக செல்லமுயன்ற பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## பஸ்கள், கார்களுக்கு ... (03 ஆம் பக்கத் தொடர்)

ஒதுக்கீடுகளை ஒதுக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். மாற்றங்கள் செய்யப்படும் வரை 107 SLTB டிப்போக்களில் இருந்து தனியார் பஸ்களுக்கு தேவையான எரிபொருள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். இந்த வாரமும் வாடகை வாகனங்கள் நிலையான ஒதுக்கீட்டைப் பெறும் என அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## சர்வகட்சி அரசுக்கு சஜித்... (03 ஆம் பக்கத் தொடர்)

சாத்தியமானால் இது நல்ல திட்டமாக அமையும் என்றும் தெரிவித்துள்ளார். எனவே, இது நல்ல திட்டமாக அமைவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சர்வகட்சி அரசாங்கத்துக்கு ஒத்துழைக்க வேண்டும்.

ராஜபக்ஷக்களை வீட்டுக்கு அனுப்பும் போராட்டம் வெற்றியடைந்து விட்டது. எனவே, காலிமுகத்திடலில் எவருக்கும் வேலையில்லை. அவ்வாறு அரசியல் தேவைகள் இவர்களுக்கு இருந்தால், ஆர்ப்பாட்டம் செய்வதற்கு அரசாங்கம் ஒதுக்கியுள்ள இடங்களில் தான் ஆர்ப்பாட்டங்கள் நடத்த வேண்டும். சுற்றுலாத்துறையினரைக் கவரும் பிரபல நட்சத்திர ஹோட்டல்களை வழிமறித்து ஆர்ப்பாட்டம் நடத்துவதை இனியும் அனுமதிக்க முடியாது. நாட்டின் அந்நியச் செலாவணி வருவாய்க்கு முக்கிய பங்காற்றும் கொழும்பிலுள்ள பிரபல ஹோட்டல்களை சுற்றிவளைத்து ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதை பொதுமக்கள் விரும்பவில்லை. இதனால் தான், அப்போது இருந்தது போன்று இந்த அரகலவுக்கு அதிகம் பேர் வருவதில்லை. தங்கங்களுக்கான வரிகளை தளர்த்தி, சந்தையை சுதந்திரமாக விடுவது தான் அந்நியச் செலாவணியை உழைப்பதற்கான இலகு வழி. முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆரின் திறந்த பொருளாதாரக் கொள்கையே இப்போது தேவைப்படுகிறது.

## மேல், சப்ரகமுவ,வடமேல்... (03 ஆம் பக்கத் தொடர்)

கடற்பரப்புகளும் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும்.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் மிதமான அலையுடன் காணப்படும். எனவே புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசந்துறை வரையான கடற்பரப்புகளிலும் மாத்தறையிலிருந்து பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

## ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு மிதக்கும்...

உட்பட சில இடங்களை ஒதுக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார். பெரும்பான்மையான போராட்டக்காரர்களின் தலையீட்டில் இதற்கான முறையான யோசனையை தயாரிக்குமாறு ஜனாதிபதி அவர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

நூலகங்கள், அரசியல் கற்கைகளுக்கான வசதிகள், இசை, கலை, மேடை நாடகங்கள் மற்றும் இளைஞர்களின் திறமைகள் மற்றும் தேவைகளை பூர்த்தி செய்யும் மையமாக இந்த இடத்தை உருவாக்க வேண்டும் என ஜனாதிபதி பரிந்துரைத்துள்ளார். இச்செயற்பாட்டிற்காக அனைத்து போராட்டக்காரர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான குழுவொன்றை உருவாக்குமாறு கூறியுள்ள ஜனாதிபதி, அக்குழுவிற்கு அனைத்து மதங்கள் மற்றும் பெண்களின் பிரதிநிதித்துவமும் இன்றியமையாதது எனவும் குறிப்பிட்டுள்ளார். அமைதியான போராட்டக்காரர்கள் மத்தியில் மிகவும் ஆக்கப்பூர்வமானவர்கள் இருப்பதாகவும், அவர்களைப் போற்றுவதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, போராட்டம் வன்முறையாக மாறக் கூடாது என்றும் வலியுறுத்தினார்.

## ஜனாதிபதியுடன் பேச்சு நடத்த...

ஈடுபடப் போவதில்லை என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். இந்த நிபந்தனை எதிர்காலத்தில் எழுத்துப்பூர்வமாக சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாளை 10 ஆம் திகதியன்று சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது குறித்து விவாதிக்க தமக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி விக்ரமசிங்க பதவியேற்றதன் பின்னர் அமைதியான முறையில் போராட்டம் நடத்துபவர்களுக்கு எதிரான மேற்கொள்ளப்படும் அடக்குமுறை நடவடிக்கைகளை நியாயப்படுத்த முடியாது என்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

## மொழிப்புலமை புகழ்ந்து பேசிய...

திருகோணமலை – மூதூரில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில், “நான் பேசுவதை விட உங்களைப் பேச விட்டு நான் கேட்பது தான் மிகவும் சுவையான ஒன்றாக இருக்கிறது. ஏனென்றால் நீங்கள் பேசுகின்ற அந்த தமிழ் எனக்கு பாடல் போல் இருக்கிறது. எங்கள் புழக்கத்தில் இருந்து விடுபட்ட பழந்தமிழை இன்னும் நீங்கள் மிகவும் எளிதாக, சுவாசத்தில் ஒன்றாக அந்த வார்த்தைகளை அழகாக கையாளுகிறீர்கள். அதற்காக நான் தலைவணங்கி அன்பு செலுத்துகிறேன். எடுத்துக்காட்டாக நித்திரை என்று சொல்லுகின்ற வார்த்தை, அந்த ஒரு சொல் எங்கள் எழுத்து வழக்கிலும் போய்விட்டது. என்ன நித்திரை கொள்கிறீர்களா என்று கேட்டால் தமிழகத்தில் சிரிக்கும் நிலைமை இருக்கிறது. அங்கு தூக்கம் என்ற சொல்லாடலே புழக்கத்தில் இருக்கிறது என அவர் கூறியுள்ளார்.

## சமையல் எரிவாயு விலைகள்...

விலை 45 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்தது. அதற்கிணங்க 12.5 கிலோகிராம் எடையுள்ள சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் புதிய விலை 4664 ரூபாவாகவும்

5 கிலோ கிராம் எடையுள்ள சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் புதிய விலை 1872 ரூபாவாகவும் 2.3 கிலோ கிராம் எடையுள்ள சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை 869 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுவதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

## வரிசையில் நிற்காது தேவையான...

முதல் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிலையில் இது ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நள்ளிரவில் புதுப்பிக்கப்படும் என அமைச்சர் கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி உள்ளிட்ட அனைத்து வாகனங்களுக்கும் கடந்த வாரம் எரிபொருள் வழங்கப்பட்டதை போன்று எரிபொருள் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார். இதேவேளை, QR அமைப்பின் கீழ் கடந்த வாரம் எரிபொருள் விநியோக திட்டம் மிகவும் வெற்றிகரமாக இடம்பெற்றதாக எரிசக்தி அமைச்சர் கஞ்சன ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்திருந்தார். மேலும் இதற்கு உறுதுணையாக இருந்த அனைத்து தரப்பினருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கடுமையான கண்காணிப்பினால்...

துறைமுகத்திற்கு கொண்டு வருவதற்கான செலவை இறக்குமதியாளர்கள் தெரிவிக்க வேண்டும். அதன் பிறகு பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கு எடுத்துச் செல்லும் இடம், அவை எந்தெந்த மாகாணங்களுக்கு விநியோகிக்கப்படும் என்பது குறித்த சரியான விவரங்களைத் தெரிவிக்க வேண்டும். நுகர்வோர் சேவை அதிகாரசபையால் இவை கடுமையாகக் கண்காணிக்கப்படும் என்றும், இறக்குமதியாளர்கள் பொய் சொன்னாலோ, மோசடி செய்தாலோ அவர்களை கறுப்புப் பட்டியலில் சேர்ப்போம் என்றும் செயலாளர் மேலும் தெரிவித்தார். (பா)

## ஜனாதிபதி ரணிலுக்கு...

திறமையில் எகிப்து அரசாங்கம் நம்பிக்கை கொண்டுள்ளது என எகிப்து அரபுக் குடியரசின் ஜனாதிபதி அப்தெல் பத்தா அல் சிசி (Abdel Fattah Al Sisi) வாழ்த்துச் செய்தியொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளார். ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு தனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துள்ள அப்தெல் பத்தா அல் சிசி , இலங்கை மக்களின் நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றுவதற்காக ரணில் விக்கிரமசிங்க எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றியடைய வேண்டும் என பிரார்த்தித்துள்ளார்.

இரு நாடுகளின் பொதுவான நலன்களை முன்னெடுப்பதற்கும், இரு நாட்டு நட்பு மக்களுக்கு மிகவும் வளமான எதிர்காலத்தை உறுதி செய்வதற்கும் இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த ஆர்வமாக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## 2 கோடி ரூபா நகைகளும்...

தங்க நகைகளையும் 15 இலட்சம் ரூபா பணத்தையும் திருடர்கள் கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாபிள் வர்த்தகரான கோடீஸ்வரரின் வீட்டில் நேற்று முற்பகல் 8.00 மணியளவில் புகுந்துள்ள மேற்படி கொள்ளையர்கள் வீட்டில் தங்கியிருந்த யுவதியின் கைகளை பட்டித் துண்டொன்றினால் கட்டி அவரைப் பயமுறுத்தி வீட்டின் முன் ஹோலிலுள்ள கதிரையொன்றில் அமர்த்திவிட்டு அவரிடம் அச்சமயம் கையடக்கத் தொலைபேசி இல்லையென்பதை உறுதிசெய்து கொண்டுள்ளனர். அதனையடுத்து அந்த யுவதியை அவரது அறைக்கு கூட்டிச்சென்று தம்மிடம் துப்பாக்கி உள்ளதாக கூறி பயமுறுத்தி அலுமாரியிலுள்ள பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த நகைகளையும் பணத்தையும் கொள்ளையடித்து தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேற்படி கொள்ளையர்களை கைது செய்வதற்காக விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

## ஜோசப் ஸ்டாலின் பிணையில்...

பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுதலைசெய்யுமாறு நேற்று கொழும்பு கோட்டை மஜிஸ்திரேட் நீதவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார். கடந்த 28 ஆம் திகதி இலங்கை வங்கி மாவத்தையில் இடம்பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு வீதி ஒழுங்கு சட்டத்தை மீறி மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீதிமன்ற உத்தரவை மீறி அவர் செயற்பட்டார் என கொழும்பு கோட்டை பொலிஸார் சந்தேக நபரான ஜோசப் ஸ்டாலினை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியிருந்தது. அதற்கிணங்க நீதிமன்றமானது அவரை கடந்த ஆகஸ்ட் 3 ஆம் திகதி விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது.

மேற்படி ஆர்ப்பாட்டம் தொடர்பில் நீதிமன்றம் விடுத்திருந்த உத்தரவை மீறி ஜோசப் ஸ்டாலின் செயற்பட்டுள்ளார் என்பது தொடர்பில் கொழும்பு கோட்டை பொலிஸார் நீதிமன்றத்திடம் விடயங்களை முன்வைத்திருந்தனர். அதேவேளை, சந்தேக நபரின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

இந்தநிலையில் நேற்றைய தினம் ஜோசப் ஸ்டாலின் கொழும்பு கோட்டை மஜிஸ்திரேட் நீதிமன்றத்தினால் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

## நாட்டின் மனித உரிமைகள்...

ஸ்தானிகர் அலுவலகத்தின் ஆசிய பசிபிக் பிரிவின் தலைவரான ரோரி முங்கோவன் குழுவை வழி நடத்துவார். இந்தக் குழு ஜனாதிபதி விக்கிரமசிங்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர்கள் மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோரை சந்திக்கவுள்ளது. இந்தக் குழுவினர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தையும் சந்திக்கவுள்ளனர். தனிப்பட்ட காரணங்களுக்காக தற்போதைய உயர் ஸ்தானிகர் மிச்செய்ல் பெச்சலெட் இந்த மாத இறுதியுடன் பதவி விலக முடிவு செய்திருப்பதால், இந்த குழுவின் அறிக்கை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 51 வது அமர்வில் புதிய உயர் ஸ்தானிகர் அல்லது இடைக்கால உயர் ஸ்தானிகரால் சமர்ப்பிக்கப்படும். இதேவேளைஇலங்கை தொடர்பான முக்கிய குழு (அமெரிக்கா, பிரித்தானியா, ஜெர்மனி, கனடா, மலாவி, மொண்டெனேக்ரோ மற்றும் வடக்கு மாசிடோனியா) ஏற்கனவே பல முறை ஜெனீவாவிலும் கொழும்பிலும் முறைசாரா மற்றும் இணையத்தின் மூலம் செப்டம்பU; மாதம் முன்வைக்கப்படவுள்ள இலங்கை தொடர்பான புதிய தீர்மானத்தின் வாய்ப்புகள் குறித்து விவாதித்துள்ளது.

## மற்றொமொரு முக்கிய...

மாளிகைக்குள் அத்துமீறி நுழைந்தமை, பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை மற்றும் நீதிமன்ற உத்தரவை மீறி செயற்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக் களத்தில் ஆரம்ப நாள் தொடக்கம் செயற்பட்டு வந்த முன்னணி செயற்பாட்டாளர்கள் பலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

கடந்த ஜூலை மாதம் 9ம் திகதி கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகைக்குள் சட்டவிரோதமான முறையில் நுழைந்து ஜனாதிபதி நாற்காலியில் அமர்ந்து புகைப்படம் எடுத்த நபர் ஒருவர் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் தெரணியகலையில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார். காலிமுகத்திடலில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் முக்கிய பங்காற்றிய தேசிய பிக்கு முன்னணியின் தேரர் வணக்கத்திற்குரிய கொஸ்வத்தே மகாநாம தேரர் கைது செய்யப்பட்டிருந்தார். இதேவேளை அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின் போது ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தானிஷ் அலி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மலையக ரயில் சேவைகள்...

காரணமாக நாவலப்பிட்டி மற்றும் நானுஓயா ரயில்நிலையங்களுக்கிடையில் இடம்பெற்ற மண்சரிவு , மண் மேடுகள் மற்றும் பாறைகள் விழுந்தமையினால் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன. சீரமைப்பு பணிகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியிருப்பதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்தது. இதேவேளை, மத்திய மலையகத்தின் மேற்கு சரிவுகளில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக மஸ்கெலியா சிவனொளிபாத மலை நல்லதண்ணி வீதி , இன்று முதல் தற்காலிகமாக மூடப்படுவதாக நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் ரஞ்சித் அழககோன் தெரிவித்துள்ளார். தேசிய கட்டிட ஆய்வு நிறுவன அதிகாரிகள், இந்த பாதையில் இடம்பெறும் மண் சரிவு குறித்து ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க வழிவகை செய்யும் வகையில், இந்த வீதியை தற்காலிகமாக மூட முடிவு செய்யப்பட்டதாக அவர் மேலும் கூறினார். ஹட்டன் நுவரெலியா பிரதான வீதியின் நானுஓயா கிரிமெட்டிய வீதிம் மண் சரிவினால் பாதிக்கப்பட்டிருப்பதால் இங்கு ஒரு வழிபாதை போக்குவரத்தே இடம் பெறுவதாக உதவிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## தமிழ் கூட்டமைப்பினுள் மூன்று...

மக்களினுடைய மனதில் இருந்து அது குறைந்து வருகின்றது. இதனை அனுமதிக்க முடியாது என தமிழீழ விடுதலை இயக்கத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) பத்தாவது தேசிய மாநாட்டில் உரையாற்றும் போதே செல்வம் அடைக்கலநாதன் இதனை தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், விடுதலைப்புலிகள் உட்பட ஆயுதப் போராட்ட இயக்கங்கள் அனைத்தும் ஒன்றுபட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டும். தனிக்கட்சிகளுடைய எந்தவொரு நாட்டாமைத் தனத்திலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்படவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்பட வேண்டும். இல்லையேல் தமிழ் மக்களை நாம் காப்பாற்ற முடியாது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்படாவிட்டால் அது இல்லாமல் போகும். வெறும் உதட்டளவிலேயே தமிழ் மக்களின் விடுதலை தொடர்பில் தற்போது பேசப்படுகிறது. உளப்பூர்வமான விடுதலையை தொடர்பாக பேசவில்லை . மக்களை ஏமாற்றக் கூடாது. தமிழ் தேசிய கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டும் அண்ணன் தம்பி என்று நாட்டாமைத்தனம் வேண்டாம். எங்கள் மக்கள் தற்போது இக்கட்டான சூழலில் இருக்கின்றார்கள்

அவன் பிழை இவன் பிழை என நாம் கூறுகின்றோம். மக்களின் கஷ்டங்களை போக்குகின்ற இனத்தை விடுதலை செய்கின்ற விடயங்களில் நாங்கள் ஒற்றுமையாக இருக்கின்றோமா? ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கின்றோம்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பிலே அனுபவம் மிக்க தலைவர்கள் இருக்கின்றார்கள். அவர்களது ஆலோசனைகளை பெறுவதற்கான வாய்ப்பை உண்டு பண்ண வேண்டும். தற்போது வந்தவர்கள் தமிழரசு கட்சியையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும்

இல்லாதொழிக்கின்ற செயலை செய்கின்றனர். இதனை ஒரு காலம் நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்றார்.

## குறுகிய கால பகுதியினுள்...

தொடர்பில் விழிப்புணர்வுடன் செயற்படுமாறு பொதுமக்களுக்கு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

கொரோனா தொற்றாளர்கள் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது. அதேவேளை கொவிட் 19 தொற்றாளர்களை அடையாளம் காண்பதற்கான முறையான அன்டிஜன் மற்றும் பீ.சீ.ஆர் பரிசோதனைகளை முன்பு போல் மேற்கொள்வதற்கான வசதிகள் தற்போது நாட்டில் இல்லை.

அதன் காரணமாக தொற்றாளர்கள் இனங்காணப்படுவதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது. மேலும் தற்போது கொவிட் 19 தொற்று மரணங்கள் எண்ணிக்கையிலும் தொடர்ச்சியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமை தொடருமானால் தொற்றாளர்கள் எண்ணிக்கை பாரியளவில் அதிகரித்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் தொற்றாளர்கள் எண்ணிக்கையும் அதிகரிக்கும். நாம் கொரோனா தொற்று தொடர்பாக பொது மக்களிடம் கோரிக்கை முன்வைக்கிறோம். தற்போது நிலவும் நிலைமை மிகவும் அபாயகரமானது.

நாட்டில் மற்றொரு கொவிட் அலை தோன்றும் நிலை ஏற்படுத்தி விடக்கூடாது. மேலும் அதனை தடுப்பதற்கு வீணான ஒன்று கூடல்கள் தவிர்ந்து கொள்வது, பொது இடங்களில், பொது போக்குவரத்து நேரங்களில் கட்டாயம் முகக்கவசங்கள் அணிவது மற்றும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சுகாதார வழிமுறைகளை பேணுவது பொருத்தமானது. தொற்றாளர்கள் இனங்காணப்பட்டால் அவர்களை 7 நாட்களுக்கு கட்டாய தனிமைப்படுத்தலில் ஈடுபடுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

## பளு தூக்கல் போட்டியில்...

கடந்த 06ஆம் திகதி பண்டாரகம பகுதியில் இடம்பெற்ற போட்டியில் 25 மாவட்டங்களையும் சேர்ந்த 44க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த போட்டியில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து ஒரே ஒருவராக யாழ்ப்பாணம் தென்மராட்சி பகுதியை சேர்ந்த சற்குணராசா புசாந்தன் கலந்து கொண்டு மூன்று பிரிவுகளில் நடைபெற்ற போட்டியில் மூன்றிலும் வென்று , மூன்று தங்க பதக்கங்களை பெற்றுக்கொண்டுள்ளார்.

120 கிலோவிற்கு மேற்பட்டோருக்கான பிரிவில் கலந்து கொண்ட இவர், squat பிரிவில் 330 கிலோ கிராமையும் , bench press பிரிவில் 175 கிலோ கிராமையும், dead lift பிரிவில் 261 கிலோ கிராமையும் தூக்கி வெற்றி பெற்றுள்ளார். இதில் squat மற்றும் deadlift பிரிவில் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார். அத்துடன் குறித்த போட்டியில் மொத்தமாக 766 கிலோ கிராமை தூக்கி புதிய சாதனையையும் படைத்துள்ளார்.

யாழ்ப்பாணம் தென்மராட்சி பகுதியை சேர்ந்த இளைஞன் தேசிய ரீதியில் நடைபெற்ற பளு தூக்கல் போட்டியில் தேசிய ரீதியில் மூன்று சாதனைகளை படைத்து மூன்று தங்கப் பதக்கங்களை வென்றுள்ளதை அடுத்து பலரும் தமது பாராட்டுக்களை தெரிவித்து வருகின்றனர்.

# நம் அருகிலும் கடவுள் இருக்கிறார் என்பதை மழுங்கடிப்பது விழிப்பற்ற மனநிலையே

நம் உள்ளத்திலும், அருகிலும் கடவுள் இருக்கிறார் என்பதை நம்மால் உணரமுடியாமல் நம் அறிவையும் சிந்தனைகளையும் மழுங்கடிப்பதே விழிப்பற்ற மனநிலைதான்.

இவ்வுலக மாயையும் செல்வத்தின்மீதான பேராசையுமே கடவுளைக் காணும் நம் அகக் கண்களை மறைக்கின்றன. ஆகவே, விசுவாசத்தின் தந்தை ஆபிரகாமைப்போல் கடவுளை மட்டுமே நாம் பெரும் செல்வமாகக் கொண்டிருந்தால் இயேசு கூறும் விழிப்புணர்வுள்ள பணியாளர்களாய் வாழ்ந்திட முடியும்.

மலையில் இருக்கும் குகை ஒன்றில் தியானம் செய்வதற்காக குருவும் சீடரும் நடந்து சென்றுகொண்டிருந்தனர். நடக்கத் தொடங்கி அரை மணி நேரம் கடந்துவிட்டது. குரு மௌனமாகப் பின்னால் வர சீடர் வேகமாக முன்னால் நடந்து கொண்டிருந்தார்.

சிறிது நேரத்தில் குருவின் பார்வையில் மறைந்து வெகு தொலைவுக்குச் சென்றுவிட்டார் சீடர். குரு மெல்ல நடந்து வந்துகொண்டிருந்தார். சில நிமிடங்கள் கடந்தன. விரைவாகச் சென்ற சீடர் தூரத்தில் சோர்வுடன் அமர்ந்திருந்தார். குரு கையில் ஒரு பச்சிலையுடன் நடந்து வந்துகொண்டிருந்தார்.

அவர் சீடரிடம் வந்ததும் தன் கையிலிருந்த பச்சிலையைச் சீடரிடம் கொடுத்து முகர்ந்து பார்க்கச் சொன்னார். சீடர் அதனை முகர்ந்ததும் அதில் எலுமிச்சை மணம் வீசியது. அதன் மணம் சீடரின் மனதுக்கும் உடலுக்கும் மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்தது.

“குருவே இது என்ன இலை?” என்று சீடர் கேட்க, “இதன் பெயர் எலுமிச்சைப் புல். இது சாதாரண புல்லைப் போலத் தோன்றினாலும் எலுமிச்சை மணம் கொண்டது” என்று பதிலளித்தார். “குருவே உங்களிடம் ஒரு கேள்வி. தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது” என்று சீடர் கேட்க, புன்னகைத்தவாறே,,. கேள்...” என்றார் குரு.

”ஆன்மீக உயர்வடைய ஒருவருக்கு குரு அவசியம்தானா?” “ஒருவருக்கு விழிப்புணர்வு கிடைக்கும் வரை அவருக்கு குரு அவசியமா” “விழிப்புணர்வு என்பது என்ன?” என்று சில கேள்விகளை எழுப்பினார் சீடர்.

குருவோ “நான் கொடுத்த எலுமிச்சைப் புல்லை முகர்ந்தாய் அல்லவா? அதற்கு முன் இங்கே இருக்கும் எலுமிச்சைப் புல்லைப் பற்றி உனக்குத் தெரியுமா?” என்று குரு கேட்க, “தெரியாது” என்றார் சீடர்.



“நான் வரும் வரை இங்கே அமர்ந்திருந்தாயே. உன் கால்களுக்கு அருகிலேயே அந்தப் புல் புதர் போல வளர்ந்திருக்கிறது. உன் கால்களுக்குக் கீழே அந்தப் பொருள் இருப்பது கூடத் தெரியாமல், இன்னொருவர் அதை உனக்குத் தரும் வரை இங்கு நீ அமர்ந்திருக்கிறாய். நீ விழிப்புணர்வு கொண்டவனாக இருந்திருந்தால் உனக்கே அது தெரிந்திருக்கும்” என்றார் குரு.

“அப்படியானால் விழிப்புணர்வு வரும் வரை குரு தேவை அல்லவா?” என்று சீடர் வினவ, “விழிப்புணர்வு வரும் வரை குரு தேவைதான். விழிப்புணர்வு வந்த பின் குரு எல்லா இடத்திலும் இருப்பதை நீ உணர்வாய்” என்றார். அப்படியெனில் அனைவருக்கும் குரு தேவையா?” என்று சீடர் மீண்டும் கேட்க, “ஆம். அதனால் தான் ஆண்டாண்டு காலமாக இம்மலையில் எலுமிச்சைப் புல் வளர்கிறது, உன்னையும் என்னையும் போல பலர் இங்கே வந்து இதே கேள்வியையும் பதிலையும் விவரிக்கிறார்கள்” என்றார்.

நம் உள்ளத்திலும், அருகிலும் கடவுள் இருக்கிறார் என்பதை நம்மால் உணரமுடியாமல் நம் அறிவையும் சிந்தனைகளையும் மழுங்கடிப்பதே விழிப்பற்ற மனநிலைதான். நம் முதுபெரும் தந்தை ஆபிரகாமைப்போல் கடவுளை மட்டுமே நாம் பெரும் செல்வமாகக் கொண்டிருந்தால் இயேசு கூறும் விழிப்புணர்வுள்ள பணியாளர்களாய் வாழ்ந்திட முடியும். அதற்கான அருள்வரத்தை இறைவனிடம் கேட்போம்.




# இயேசு இளையோரின் நண்பராக இருப்பாராக

திருத்தந்தை பிரான்சிஸ்



எந்த வயதிலும் இளையோராக இருப்பவர் அனைவரும், “வாழ்வில் என்ன தேடுகிறேன்”? என்ற கேள்வியைத் தனக்குத்தானே அடிக்கடி கேட்டுக்கொள்ளவேண்டும் என திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

இளையோர் இயேசுவை தங்களின் வாழ்வுப் பயணம் முழுவதிலும் மாபெரும் நண்பராகவும் உடனிருப்பவராகவும் கொண்டிருக்கவேண்டும் என்ற தன் ஆவலை ஐரோப்பிய இளையோர் குழு ஒன்றிடம் இவ்வெள்ளியன்று தெரிவித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இத்தாலியில் இளையோர் பயிற்சி முகாமில் பங்குபெறும் இத்தாலி மற்றும், ஏனைய ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த இளையோர், பயிற்சியாளர்கள், ஆன்மிக வழிநடத்துனர்கள் என 350 பேரை கடந்த 5 ஆம் திகதி வத்திக்கானின் சந்தித்து உரையாற்றியபோதே திருத்தந்தை இவ்வாறு. தெரிவித்துள்ளார்.

யோர்தான் நதிக்கரையில் தான் சந்தித்த முதல் சீடர்களிடம் “என்ன தேடுகிறீர்கள்?” (யோவா.1:38) என இயேசு கேட்ட கேள்வியை மையப்படுத்தி தன் சிந்தனைகளைப் பகிர்ந்துகொண்ட திருத்தந்தை, புனிதக் கூறுகளைக் கொண்டிராத, அதேநேரம் உலகப் போக்கை அதிகமாகக் கொண்டிருக்கும் ஒரு கலாசார உலகில் பிறந்திருக்கின்ற உங்களில், மனிதரின் உள்ளாழத்தில் எக்காலத்திலும் எழக்கூடிய கேள்விகள் எழலாம்.

நம் வாழ்வுக்கு அர்த்தம் என்ன? நாம் எங்கிருந்து வந்தோம்? வாழ்வின் தொடக்கம் என்ன? உலகில் குற்றமற்றவர்கள் துன்புறுவது ஏன்? போன்று உங்களில் எழுகின்ற கேள்விகளை இயேசு விரும்புகிறார். அதற்கும் மேலாக, அவற்றுக்கு அவர் பதிலளிக்க விரும்புகிறார்.

நாம் எல்லாரும் ஏங்குகின்ற வாழ்வின் அர்த்தம், முழு நிறைவு, மகிழ்வு ஆகிய அனைத்துமாக இருப்பவர் இயேசு கிறிஸ்துவே என்றும் அவர், உங்களில் உங்களோடு வாழ்கிறார். அவர் உங்களை அழைக்கிறார். தம்மிடம் நீங்கள் திரும்பி வருவதற்காகக் காத்திருக்கிறார் என்றும் நம்மை நாம் அன்புகூர்வதைவிட அவர் நம்மை அன்புகூர்கிறார் என்றும் இளையோரிடம் அவர்தெரிவித்துள்ளார்.

நான் 17 வயதை எட்டியபோது, அருள்பணித்துவ வாழ்வுக்கு இயேசு என்னை அழைத்ததைக் கேட்டேன்,

இயேசு, ஆல்ஃபா மற்றும் ஒமேகாவாக, தொடக்கமும், முடிவுமாக இருக்கிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நீங்கள் இயேசுவோடு ஒன்றித்திருக்கும் போது ஒவ்வொருவரும் மலர்ந்து கனிதரும் விதையாக மாறுகிறீர்கள் என்றும் திருத்தந்தை எடுத்துரைத்துள்ளார்.

மேரி தெரேசா...

# திம்பிரிகஸ்யாய புனித தெரேசா ஆலயத்தில் விசேட ஞானஒடுக்கம்



டிவைன் மேர்சி தியான மையம், ஏற்பாடு செய்துள்ள ஒருவார ஞானஒடுக்கம் கொழும்பு திம்பிரிகஸ்யாய புனித தெரேசா ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள அருட்தந்தை ரபாயேல் அடிகளார் தலைமையிலான குழு இந்த ஞானஒடுக்கத்தை நடத்தவுள்ளதுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருப்பலியுடன் ஞானஒடுக்கம் ஆரம்பமானது.

அதனைத் தொடர்ந்து திங்கட்கிழமை மாலை 6 மணி முதல் 9 மணி வரை தினமும் தொடர்ந்து 13ம் திகதி வரை இந்த ஞான ஒடுக்கம் நடைபெறவுள்ளது.

செபமாலை, இறைபுகழ்ச்சி, திருப்பலி, இறைவார்த்தைப் பகிர்வு, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை ஆகிய அம்சங்களுடன் இந்த சிறப்பு ஞானஒடுக்கம் நடைபெறவுள்ளதாக பங்குத் தந்தை சந்தன பெரேரா அடிகளார் தெரிவித்தார். (ஸ)

# வீச்சுக்கல்முனை புனித அன்னம்மாள் ஆலய திருவிழா









மட்டக்களப்பு வீச்சுக்கல்முனை புனித அன்னம்மாள் ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில் இடம்பெற்றது. திருவிழா நிகழ்வுகள் கடந்த 22ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு பங்குத்தந்தை அருட்பணி சீ.வி.அன்னதாஸ் அடிகளார் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின. தொடர்ந்து நவநாள் ஆராதனைகள் இடம்பெற்றன. 30 ஆம் திகதி சனிக்கிழமை நற்கருணை ஆராதனையும் புனித அன்னம்மாளின் திருச்சுரூப பவனியும் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து கடந்த 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில் திருவிழா கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. (படங்கள்; கல்லடி குறூப் நிருபர்)

# நலமான வாழ்வைக் கொடுப்பது உறுதியான நம்பிக்கையே

நலமான வாழ்வுதனை கடவுள் எவ்வளவு தூரம் நம் வாழ்வில் பிரதிபலிக்கிறார் என்பதை முதுபெரும் தந்தையாகிய ஆபிரகாமின் வாழ்விலிருந்து கடவுள் நமக்கு கற்றுக்கொடுக்கிறார். நம்பிக்கையால் யாவரும் நலமடைய முடியும் என்பதே கடந்த ஞாயிறு வாசகங்கள் நமக்கு கொடுக்கும் நம்பிக்கை கடந்த ஞாயிறு வழிபாடு நம்பிக்கையால் ஒருவர் நலமடைகிறார் என்ற செய்தியை வலியுறுத்தி நம் வாழ்வைச் சிந்தித்து பார்க்க அழைப்பு விடுக்கிறது. நாம் வாழும் இந்த சமூகம் பல்வேறு பின்புலங்களைத் தன்னுள்ளே கொண்டிருந்தாலும் அதன் மையம் நம்பிக்கை என்ற ஒற்றை வார்த்தையின் அடையாளமாய் திகழ்கிறது என்றால் அது மிகையில்லை.

எந்த துறையை எடுத்தாலும் எந்த வாழ்வியல் நிகழ்வைக் கண்ணோக்கினாலும் அவையெல்லாம் அன்றாட பேசு பொருளாய் மாற்றப்படுவதற்கு காரணமே அதில் காணப்படும் நம்பிக்கைதான். அதைத்தான் கடந்த ஞாயிறு வழிபாடு நமக்கு எடுத்துரைக்கின்றது.

**முதல் வாசகமானது,**

எவ்வாறு இஸ்ரயேல் மக்கள் தங்கள் வாழ்வில் கடவுள் கொடுத்த வாக்குறுதியின் பின்னணியில் தங்களிடையே காணப்படும் நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறார்கள் என்பதை கூறுகிறது.

நீங்கள் விடுதலையடைந்தது, பலி ஒப்புக்கொடுத்தது, ஒருமித்து உடன்பட்டது இவையனைத்தும் உங்களிடத்தில் விளங்கிய நம்பிக்கையால் உருவாகிய நலமான செயல்கள் என்பதை கடவுள் அம் மக்களுக்கு வெளிப்படுத்துகிறார். அதையே வாக்குறுதியாக வழங்கி இவற்றை தலைமுறைதோறும் பறைசாற்ற பணிப்பதை எடுத்தரைக்கிறது சாலமோனின் ஞானநூல்.

**இரண்டாம் வாசகத்தில்,**

நலமான வாழ்வுதனை கடவுள் எவ்வளவு தூரம் நம் வாழ்வில் பிரதிபலிக்கிறார் என்பதை முதுபெரும் தந்தையாகிய ஆபிரகாமின் வாழ்விலிருந்து கடவுள் நமக்கு கற்றுக்கொடுக்கிறார்.

ஆபிரகாம் தன் வாழ்வு முழுவதும் எவ்வாறு நம்பிக்கையில் ஆழப்பட்டு தன் நலமான ஆசீரைப் பெற்றுக்கொண்டார் என்பதைத் தெளிவுபடுத்துகிறது எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம். ஒருவர் எந்தளவு கடவுள்மீது நம்பிக்கை வைக்கிறாரோ அந்தளவிற்கு அவரின் வாழ்வு நலன்களால் நிரப்பப்படும் என்பதற்கு ஆபிரகாம் சிறந்த உதாரணம்.

**நற்செய்தியில்,**

ஆபிரகாமிடத்தில் விளங்கிய நம்பிக்கை வாழ்வும் முதல் வாசகத்தில் தென்படுகின்ற இஸ்ரயேல் மக்களின் வாழ்வுநிலையும் நம்மில் எதிரொலிக்க எதார்த்தமான வழிகளை, வாழ்வியல் சிந்தனைகளைக் கற்றுக்கொடுக்கிறது. இயேசுவின் இந்த போதனை நம்பிக்கையாளர்களாகிய நம் அனைவருக்கும் நலமான வாழ்வைக் கொடுக்கின்றன என்பதை மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறார் லூக்கா நற்செய்தியாளர்.

எவ்வாறு புரிந்து கொள்வது?

இயேசு இன்று நம்முன் கொடுக்கின்ற உவமையின் பின்னணியில் சிந்திக்கின்ற போது ஒரு பணியாள் தன் வாழ்வில் எந்தளவு நம்பிக்கைக்குரியவனாக இருக்க வேண்டுமென்பதில் தொடங்கும் இயேசு வார்த்தையில், நம்புவதால் உன் வாழ்வு நலம் காணும், நலன்களையே அனுபவிப்பாய் என்கிற ஆசீர்வாதத்தையும் கொடுக்கிறார்.அதற்கு மூன்று வகையான வழிமுறைகளையும் தருகிறார். யார் ஒருவர்; தன் வாழ்வில் முழுமையான ஆசீரை பெற வேண்டுமென்று எதிர்பார்க்கிறாரோ அவர் என்ன செய்யலாம் இயேசு காட்டும் வழியில் பயணித்து அதற்கான ஆசீரை தமதாக்கலாம்.



**நம்பிக்கையால் யாவரும் நலமடைய முடியும் என்பதே கடந்த ஞாயிறு வாசகங்கள் கொடுக்கும் நம்பிக்கை:**

முழுமையான நம்பிக்கை என்பது நாம் நினைப்பது நடக்கும் என்ற எதிர்நோக்கு (எபி11:1). அதாவது திருத்தூதர்களைப் பார்த்து இயேசு என்ன சொல்கிறார்: சிறு மந்தையே அஞ்சாதே. அப்படியென்றால்;, நீங்கள் விரும்பும் வாழ்வை எவ்வாறு பெற்றுக்கொள்வீர் அல்லது எப்படி கிடைக்கும் என்று யாராவது கேட்டால், அது உங்களிடத்தில் வெளிப்படும் முழுமையான நம்பிக்கையால் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும். அதுதான் 'நலமான வாழ்வாய்' நமக்கு கிடைக்கிறது. இதைத்தான் திபா 33:20 சொல்கிறது: "நாம் ஆண்டவரை நம்பியிருக்கின்றோம். அவரே நமக்குத் துணையும், கேடயமும் ஆவார்". இப்படிப்பட்ட விசுவாசப் பார்வைதான் நம்மை முழுமையான நம்பிக்கை வாழ்வுக்குள் அழைத்து செல்லும்.

**விழிப்பு நிலை அல்லது விழிப்பாய் இருத்தல்:**

கடவுள் மீது நாம் கொண்டுள்ள முழுமையான நம்பிக்கை நம் வாழ்வில் பிரதிபலித்து நலத்தையும், வளத்தையும், வரத்தையும் பெற்று மகிழ வேண்டுமென்றால் நம்பிக்கையின் அடுத்த நிலையான அத்தகு நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ள தேவையான விழிப்பு நிலை நமக்கு தேவை. நலமான வாழ்வு எனக்கு வேண்டுமென்றால் நிச்சயமான நாம் விழிப்போடு இருக்க வேண்டும். எப்படி? நலமாய் இருக்க வேண்டிய என் வாழ்வு நலமற்றதாய் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்வதே விழிப்பு நிலை. உதாரணமாக, நற்செய்தியில் வரும் உவமையில், வீட்டுப்பணியாளர் பொறுப்பில் உள்ளவர் தன் தலைவர் எந்த நேரத்திலும் வருவார் என்ற விழிப்பு நிலையில் இல்லாததால்தான் அவர் தன் விருப்பப்படி வாழ்கிறார். விழிப்பு நிலை இல்லாத போது நம் நம்பிக்கையும் அலையில் சிக்கி சிதையும் படகாகத்தான் இருக்கும். அத்தகைய நிலை நம்மில் உருவாகாமல் இருக்கவே இயேசு விழிப்பாய் இருங்கள். எல்லையற்ற நலத்தினைப் பெறுங்கள் என்று பறைசாற்றுகிறார்.முழுமையான நம்பிக்கையும், விழிப்பாய் இருக்கும் நிலையும், பொறுப்போடு பணிவிடை புரிதலும் நம்மில் இருக்கும் நம்பிக்கையை இன்னும் வலுப்படுத்தி நலமான வாழ்வைப் பெற்றிட உதவட்டும். இறைவனே நம் வாழ்வின் உற்ற துணை என்னும் எண்ணத்தை உருவாக்கட்டும்.

அருட்பணி அ.மாணிக்கம்...

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆடி மாதம் 25ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 முஹர்ரம் பிறை 10

## குறள் தரும் சிந்தனை



தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூது

சினத்தைத் தூண்டாமல் மகிழத்தக்க அளவுக்குச் செய்திகளைத் தொகுத்தும், தேவையற்ற செய்திகளை ஒதுக்கியும், நல்ல பயன ளிக்கும் விதமாகச் சொல்லுவதே சிறந்த தூதருக்கு அழகாகும்.

# சட்டமும் ஒழுங்கும் பேணி பாதுகாக்கப்படுவது அவசியம்

நாட்டில் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைகின்ற சந்தர்ப்பங்களில் குற்றச்செயல்கள் பெருகுவது வழக்கம். குற்றவாளிகள் மத்தியில் காணப்படுகின்ற சுபாவம் அத்தகையதாகும். சட்டமும் ஒழுங்கும் எப்போது சீர்குலையுமென்று அவர்கள் காத்துக் கொண்டிருப்பதுண்டு. நாட்டில் அமைதியற்ற, சீர்குலைவான சூழ்நிலை உருவாகின்ற போது, குற்றவாளிகளின் கைகள் ஓங்குகின்றன. நாட்டின் குழப்பகரமான சூழலை தங்களுக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தியவாறு அவர்கள் குற்றச்செயல்களில் ஈடுபடத் தொடங்குவர்.

எமது நாட்டில் சமீப தினங்களாக துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அதிகளவில் இடம்பெற்றுள்ளன. நீதிமன்றக் கட்டடத் தொகுதியினுள் பிரவேசித்து துப்பாக்கிச் சூடு நடத்தும் அளவுக்கு குற்றவாளிகளிடம் துணிச்சல் உருவாகியிருக்கின்றது. துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் காரணமாக உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளன. இச்சம்பவங்களில் அதிகமானவை பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புள்ளவையென்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவங்களில் அரசியல் தொடர்பு இருப்பதாக தகவல்கள் இல்லை. பாதாள உலகக் குழுக்களிடையேயான போட்டாபோட்டி காரணமாகவே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. கட்டுப்படுத்தப்பட்டிருந்த பாதாள உலகக் குழுக்கள், நாட்டின் சமீபகால பதற்ற நிலைமையை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தியபடி குற்றச்செயல்களில் ஈடுபடுவதற்கு முற்படுவதாகத் தெரிகின்றது.

நாட்டில் தற்போது சட்டமும் ஒழுங்கும் சுமுகநிலைக்கு வந்துள்ளன. எனவே பொலிசார் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு குற்றச்செயல்களை ஒடுக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. அப்போதுதான் சட்டம் ஒழுங்கை முறையாக நிலைநாட்ட வழியேற்படும். பொதுமக்களுக்குரிய பாதுகாப்பையும் உரியபடி வழங்க முடியும்.

நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் சட்டத்தையும் ஒழுங்கையும் சரியாகக் கடைப்பிடிக்கும் சுபாவத்தை தமக்குள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். சட்டத்தை மீறுகின்ற கலாசாரம் நாட்டில் ஏற்படுமானால், அந்நாடு எதிர்காலத்தில் அமைதியற்றதாக ஆகிவிடும். அப்பாவிப் பொதுமக்கள் நாட்டில் நிம்மதியாக வாழவே முடியாத சூழ்நிலை உருவாகி விடலாம். எனவே சட்டத்தை சரிவர நடைமுறைப்படுத்துவதும், அதனை உரியபடி கடைப்பிடிப்பதும் அவசியமாகின்றன.

எமது நாட்டில் கடந்த சில மாதங்களாக சட்டமீறல்கள் பெருமளவில் நடந்துள்ளன. பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணுமாறு கோரி நாட்டில் ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையில், வன்முறைகளும் அரங்கேறின. உடைமைகளுக்குச் சேதம் விளைவித்தமை, தீவைப்பு, அரச கட்டடங்களை அத்துமீறி ஆக்கிரமித்தமை, தனிநபர் மீதான தாக்குதல்கள் என்றெல்லாம் குறுகிய காலப் பகுதிக்குள் இடம்பெற்றுள்ள சம்பவங்கள் ஏராளம்.

சட்டத்தையும்ஒழுங்கையும் நிலைநாட்டும் கடமையை மேற்கொள்கின்ற பொலிசார் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவங்களும் நடந்துள்ளன.

அமைதியை நிலைநாட்டும் கடமையை மேற்கொள்வதற்காகச் சென்ற பொலிசாரும் இராணுவத்தினரும் அவமானப்படுத்தப்பட்ட சம்பவங்களும் அதிக இடங்களில் இடம்பெற்றுள்ளன.

ஆர்ப்பாட்டங்கள் எல்லைமீறி வன்முறை உருவெடுக்கின்ற போது, அங்கு அமைதியை நிலைநாட்ட வேண்டியது பொலிசாரின் கடமையாகும். ஆனால் ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிசாரையும் பாதுகாப்புப் படையினரையும் எதிரிகள் போன்று கருதி, வசைபாடி அவமதித்த சம்பவங்கள் பல இடங்களில் நடந்தேறின. சட்டத்தை தங்களது கைகளில் எடுத்துக் கொண்டவர்கள் போன்று பலர் செயற்பட்டதை தொலைக்காட்சிகளில் நன்றாகவே காண முடிந்தது.

இவையெல்லாம் ஒட்டுமொத்தமான சட்டமீறல்கள் ஆகும். நாட்டின் ஆட்சியை முற்றுமுழுதாக தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டவர்கள் போன்று பலர் அடாவடித்தனத்தில் ஈடுபட்டதை நன்றாகவே காண முடிந்தது. அப்பாவிகளையோ அதிகாரிகளையோ தாங்கள் நினைத்தபடி தாக்குவதற்கும், உடைமைகளுக்குத் தீவைப்பதற்கும் பலருக்கு அக்காலத்தில் மனத்துணிச்சல் ஏற்பட்டிருந்தது. அந்தத் துணிச்சலே அவர்களிடம் காலப்போக்கில் வன்முறை சுபாவமாக மாறிவிட்டது. சட்டத்தை ஒரு பொருட்டாகவே மதிக்காத குணாம்சம் பலரிடம் குடிகொண்டு விட்டது.

நாட்டில் சில மாதங்களாக இடம்பெற்ற போராட்டங்களின் போது பலரிடம் தானாகவே ஏற்பட்டு விட்ட சுபாவம் இதுவாகும். அப்பாவி மக்கள் அஞ்சுகின்றபடியாக அவ்வேளையில் பலரின் கைகள் ஓங்கியிருந்தன. தங்களது கருத்தை வெளிப்படையாக மற்றவர்களிடம் கூறுவதற்கும் அப்பாவிகள் அஞ்சினர். போராட்டம் என்பதன் பேரில் மற்றொரு புறத்தில் வன்முறைகள் இடம்பெற்றன. சட்டத்தை அலட்சியம் செய்வதைப் பற்றி பலர் அக்கறை கொள்ளாத காலப்பகுதி அது.

அவ்வாறான பதற்றமான சூழல் நிலவியதன் காரணமாகவே வன்முறைக் கும்பல்களும் சமீப காலமாக குற்றச்செயல்களில் துணிச்சலுடன் ஈடுபடத் துணிந்து விட்டன. நாட்டில் தளம்பல் நிலைமையொன்று தோன்றுமானால் குற்றவாளிகள் இவ்வாறுதான் துணிச்சல் பெறுவர்.

இவற்றையெல்லாம் இனிமேலும் அனுமதிப்பது ஆரோக்கியமல்ல. குற்றத்தை யார் புரிந்தாலும் அவர்களை சட்டத்தின் முன்பாக நிறுத்துவது பொலிசாரின் கடமையாகும். சட்டத்தை அமுல்படுத்துவதில் பாரபட்சத்துக்கு இடமளிக்கலாகாது. நாட்டில் சட்டம், ஒழுங்கு, அமைதி நிலைநாட்டப்படுவது அவசியம். அப்போதுதான் மக்களுக்கு பாதுகாப்பு ஏற்படும்.

editor.tkn@lakehouse.lk

# ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் நன்னீர் மீன்பிடி தொழிலை ஊக்குவிக்க பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்‌ஷ ஏற்பாடு

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் நன்னீர் மீன்பிடித் தொழிலை மேம்படுத்துவதற்காக பாராளுமன்ற பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்‌ஷ முன்வந்துள்ளார். நன்னீர் மீன்பிடித் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட குடும்பத்தினரின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான பல திட்டங்கள் இம்மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் நன்னீர் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் 160 குடும்பங்களுக்கு உதவிகளை வழங்கும் நிகழ்வு அவரது தலைமையில் அண்மையில் சூரியவெவ பிரதேச செயலாளர் காரியாலயத்தில் இடம்பெற்றது. அங்கு அவர் பத்தரை இலட்சம் ரூபா பெறுமதியான கண்ணாடிஇழைப் படகுகளை மீன்பிடித் தொழிலாளர்களுக்கு வழங்கினார்.







வெதிவேவ சம்பத் மீன்பிடிச் சங்கம், ஆடியன்கம கிராம மீன்பிடிச் சங்கம், கிரிவாடிய மீன்பிடிச் சங்கம், மீகஹஜபுர மீன்பிடிச் சங்கம், மகாவலி கடஅர மீன்பிடிச் சங்கம் ஆகியவற்றுக்கே இப்படகுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

'கிராமத்துடனான கலந்துரையாடல்' நிகழ்ச்சியில் முன்வைக்கப்பட்ட கிராமத்தவர்களின் வேண்டுகோளுக்கிணங்கவே கண்ணாடியிழைப் படகுகள் விநியோகிக்கப்பட்டதாக பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

தென்மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ் .வி .பி ஆனந்தவினால் ஒதுக்கப்பட்ட நிதியும் இப்படகுகள் கொள்வனவுக்கென அளிக்கப்பட்டதோடு அவரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்.

அங்கு உரையாற்றிய பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்‌ஷ, ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் வசிக்கும் நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களின் குடும்ப வாழ்வாதாரத்தை மேம்படுத்த மேலும் பல திட்டங்கள் செயல்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

தங்களுக்கு இந்த 'பைபர்' படகுகளை வழங்கியது தொடர்பாக அம்மக்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

சூரியவெவ பிரதேச செயலாளர் காரியாலயம் ஏற்பாடு செய்திருந்த பைபர் படகுகளை வழங்கும் நிகழ்வில் நீர்வாழ் உயிரினங்கள் திணைக்களத்தின் பரிந்துரையின் பேரிலேயே படகுகள் வழங்கப்பட்டன.

# இனிய நந்தவனம் ஏற்பாட்டில் அந்தமான் தமிழர் சங்கத்தில் நடைபெற்ற இலக்கிய சந்திப்பு

தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளியின் இலக்கிய அடையாளமாக வெளிவந்து கொண்டிருக்கும் இனிய நந்தவனம் மாத இதழின் ஏற்பாட்டில் பல்வேறு இலக்கியச் சந்திப்பு நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இச்சந்திப்பில் இலக்கிய ஆளுமைகளும் சமூக சேவகர்களும் விருதுகள் வழங்கி சிறப்பிக்கப்படுகின்றனர்.

அந்த வகையில் அந்தமான் தமிழர் சங்கத்தில் இனிய நந்தவனம் ஏற்பாடு செய்த இலக்கியச் சந்திப்பு அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. அந்தமான் தமிழர் சங்கத் தலைவர் எல். மூர்த்தி தலைமையில் செயலாளர் வே.காளிதாஸ், நந்தவனம் இதழாசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இலக்கியச் சந்திப்பில் தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்த கல்வெட்டு ஆய்வாளர் அறம் கிருஷ்ணன் அவர்களுக்கு 'ஆய்வுச் செம்மல்' விருதும், சமூகசேவகர் குகன் லோகநாயகன் அவர்களுக்கு 'சேவைச்செம்மல்' விருதும் வழங்கப்பட்டன.





எழுத்தாளர்கள் என். சண்முகம், அ.க.இராசு, லோகசந்திரபிரபு, நரசிம்மன், ராஜ்குமார், ம.திருவள்ளுவர், ரா.ஜனார்தனன், கோ.வெங்கடேசன் ஆகியோருக்கு 'இலக்கியச்சுடர்' விருது வழங்கப்பட்டது.

இந்நிகழ்வுக்குத் தலைமையேற்ற அந்தமான் தமிழர் சங்கத் தலைவர் விருதாளர்களை வாழ்த்திப்

பேசும் போது "தமிழ்நாட்டிலிருந்து நந்தவனம் சந்திரசேகரன் தலைமையில் ஆண்டுக்கு இரண்டு மூன்று முறையாவது எழுத்தாளர்களையும் பல இலக்கிய ஆளுமைகளை தமிழர் சங்கத்துக்கு அழைத்து வந்து இப்படி ஒரு இலக்கியச் சந்திப்பு நிகழ்த்துவது எங்களுக்குப் பெருமையாக இருக்கிறது. இதன் மூலம் அந்தமான் தமிழர்களும் தமிழ் ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளவும் தொடர்ந்து தமிழ்ப்பணிகளை மேற்கொள்ளவும் உத்வேகம் ஏற்படுகின்றது.





அத்துடன் நமது தமிழர்களின் கலாசாரத்தையும் பண்பாட்டையும் மேம்படுத்திக் கொள்ள உதவியாகவும் இருக்கிறது" எனக் குறிப்பிட்டார். மேற்படி நிகழ்வில் அந்தமான் தமிழர் சங்கத் துணைச் செயலாளர் சோழன் சுதாகரன், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் அந்தமான் ரோட்டரி சங்கத் தலைவர் தினேசுபோஜராசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

எழுத்தாளர்கள் தாங்கள் எழுதிய நூல்களை தமிழர் சங்க நூலகத்திற்கு வழங்கினர். நிறைவாக விருதாளர்கள் சார்பில் அறம் கிருஷ்ணன் ஏற்புரையாற்றி அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

# காத்தான்குடியில் சேவையின் திலகமாக திகழ்ந்தவர் காதிமுல் இல்ம் ஷைகுல் பலாஹ் அப்துல்லாஹ் ஹஸ்ரத்

தென்னிந்தியா அதிராம்பட்டினத்தை பிறப்பிடமாகவும், இலங்கையின் காத்தான்குடியை மார்க்கப்பணியாற்றும் தளமாகவும் கொண்டிருந்த மர்ஹூம் அல்லாமா ஷெய்குல் பலாஹ் எம்.ஏ அப்துல்லாஹ் ஆலிம் ரஹ்மானி ஹஸ்ரத் அவர்களின் ஞாபகார்த்த தினம் இன்றாகும்.

ஆறு வருடங்களானாலும் அவரது நினைவுகள் மக்கள் உள்ளத்தில் நிழலாடுகின்றன. தன் வாழ்நாளை காத்தான்குடிக்காக அர்ப்பணித்த பெருந்தகை அவராவார். மாணவர்களின் கல்வி மற்றும் பௌதீக செயற்பாடுகளில் கவனம் கொண்டிருந்தவர் அவர்.

யுத்த சூழலின் போது அமைதி, சமாதானம் சகவாழ்வு வேண்டி அவர் பாடுபட்டார். மர்ஹூம் ஷைகுல் பலாஹ் அவர்களுடன் அஷ்ஷஹீத் அகமது லெப்பை அவர்கள் பக்கபலமாக இருக்க மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர்கள், உயர் அதிகாரிகள், பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட மற்றும் யுத்த தரப்பினரையும் சந்தித்து பேசி இனஉறவுக்காக அவர் பாடுபட்டார். எதிர்காலத்தில் மக்கள் நிம்மதியாக, சுதந்திரமாக, சுபீட்சமாக வாழும் சூழ்நிலையை உருவாக்குவதற்காக அவர் பெரிதும் உழைத்தார். இந்திய அமைதிப்படை இலங்கையில் தங்கியிருந்த வேளையில் பாரிய முறுகல் நிலைமை ஏற்பட்ட போது அவர் அமைதிக்காகப் பாடுபட்டார். இந்திய அமைதிப்படையைச் சந்தித்து தன்னை அறிமுகப்படுத்தினார். அப்போது அந்த முறுகல் நிலைமை சுமுகமாக முடிந்தது. மர்ஹூம் ஷைகுல் பலாஹ் அவர்களுக்கு அமைதிப்படை உயர் அதிகாரிகள் உயர்ந்த மரியாதையும் செல்வாக்கும் அந்த வேளையில் கொடுத்தார்கள்.



மர்ஹூம் அப்துல்லாஹ் ஹஸ்ரத் அவர்கள் ஆன்மீக லௌகீக வழிகாட்டல்களை மக்களுக்கு தனது இறுதிக் காலம் வரை வழங்கிக் கொண்டிருந்தார். அவர் எளிமையான வாழ்வு வாழ்ந்து காட்டினார்.

மர்ஹூம் ஷைகுல் பலாஹ் மரணித்தாலும் அவர்கள் நாமம் இப்பிரதேசத்தில் என்றும் நிலைத்திருக்கும்.

அவரது தந்தை அபூபக்கர் புகழ்பெற்ற ஆலிம் ஆவார். மர்ஹூம் ஷைகுல் பலாஹ் காதிமுல் இல்ம் அப்துல்லாஹ் ஹஸ்ரத் அவர்களின் ஞாபகார்த்த தினம் இன்றாகும் (09.08.2022). நிரந்தர ஸதகதுந் ஜாரியாவாக தோற்றுவித்த ஜாமிஅதுல் பலாஹ் அறபுக்கல்லூரிக்காக அவர் இறுதி மூச்சு வரை பாடுபட்டார்.

மௌலவி
எஸ்.எம்.எம். முஸ்தபா பலாஹி
(உறுப்பினர்)
மஜ்லிஸுல் பலாஹிய்யீன்
மாணவர் சங்கம்
(புதிய காத்தான்குடி விசேட நிருபர்)

# ஆதரவற்ற சிறார்களை அரவணைத்து பராமரிக்கும் SOS குழந்தைகள் கிராமம்

பெற்றோரின் பராமரிப்பை இழந்த குழந்தைகளை பராமரிப்பதில் 'SOS குழந்தைகள் கிராமம்' அமைப்பு கவனம் செலுத்தி வருகின்றது. பெற்றோரின் பராமரிப்பை இழந்த அல்லது நீதிமன்றத் தீர்ப்புகளால் நன்னடத்தையின் கீழ் இருக்கும் சிறார்களுக்குப் பராமரிப்பை வழங்கும் ஒரு நிறுவனமாக SOS உள்ளது. SOS என்பதன் அர்த்தம் Save Our Soule என்பதாகும்.

இங்குள்ள குழந்தைகள் தூய்மையான மனப்பான்மையுடன் வளர்க்கப்படுகின்றனர். அத்துடன் நல்ல குடிமக்களாக சமூகமயமாக்கப்பட்டும் வருகின்றனர். இதனை ஏற்படுத்தியவர் ஆஸ்திரியாவைச் சேர்ந்த டொக்டர் ஹெர்மன் மெய்னர். 1949 ஆம் ஆண்டு ஏற்பட்ட போரின் போது ஆதரவற்ற குழந்தைகளுக்காக எஸ்.ஓ.எஸ் குழந்தைகள் கிராமத்தை இவர் நிறுவினார். போரினால் பெற்றோரின் பராமரிப்பை இழந்த பிள்ளைகளுக்கு ஒரு குடும்பத்தின் பாதுகாப்பை வழங்குவதே அவரது இலக்காக இருந்தது. பின்னர், மேலும் இதை விரிவுபடுத்தி 35 நாடுகளில் இதுபோன்ற குழந்தைகள் கிராமங்கள் நிறுவப்பட்டு, பிள்ளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

SOS குழந்தைகள் கிராமங்களின் தலைமையகம் ஆஸ்திரியாவில் உள்ளது. இலங்கையின் முதலாவது SOS சிறுவர் கிராமம் 1985 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இது தற்போது, இலங்கையில் பிலியந்தலை, காலி, நுவரெலியா, அநுராதபுரம், மொனராகலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் இயங்கி வருகின்றது. இக்கிராமங்களில் ஆதரவற்ற பெருமளவிலான சிறுவர்களுக்கு பாதுகாப்பான தங்குமிடம் வழங்கப்படுகின்றது.



அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர அண்மையில் அநுராதபுரம் சிறுவர் கிராமத்திற்குச் சென்று அதன் செயற்பாடுகள் குறித்து கேட்டறிந்து கொண்டார். அந்தக் கிராமத்தின் குழந்தைகள் மிகவும் மகிழ்ச்சியாகவும், நன்கு பராமரிக்கப்பட்டும் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதை இவரால் பார்க்க முடிந்தது.

அநுராதபுரம் மாவட்டத்தில் SOS சிறுவர் கிராமம் 1994 இல் நிறுவப்பட்டது. இதன் முதல் இயக்குனர் அஜித் விஜேமான்ன. தற்போதைய இயக்குனர் அதுல கமல்சிறி. இங்கு சுமார் 400 குழந்தைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களில் 8 பேர் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள். இதில் 47 பேருக்கு திருமணமும் ஆகிவிட்டது.

குழந்தைகளுக்கு உணவு, தண்ணீர், உடைகள், சுகாதார வசதிகள், கல்வி மற்றும் பராமரிப்பு போன்ற அடிப்படைத் தேவைகளைப் பெறும் இடமாக SOS குழந்தைகள் கிராமம் காணப்படுகின்றது. SOS சிறுவர் கிராமத்தின் ஊடாக இலங்கையில் 41000 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் அடைக்கலம் பெற்று, தமது வாழ்வில் வெற்றியீட்டியுள்ளனர்.

SOS சிறுவர் கிராமத்திற்கு தேவையான உதவிகள் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் உள்ள பணக்காரர்களிடம் இருந்து கிடைக்கின்றன. இது அரசாங்க ஆதரவையும் பெற்றுள்ளதோடு, நன்னடத்தை மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம், குழந்தைகள் மற்றும் பெண்கள் பணியகம், தேசிய குழந்தை காப்பீட்டு ஆணையம் ஆகியவற்றுடன் இணைந்து செயல்படும் ஒரு நிறுவனமாக உள்ளது.

இது போன்ற நிறுவனங்களை நடத்துவதற்கு ஆதரவளிக்கும் நன்கொடையாளர்கள் இருந்தால், அவர்களின் ஆதரவு இது போன்ற நேரத்தில் மிகவும் மதிப்புமிக்க பரிசாக இருக்கும் எனக் கோரப்பட்டுள்ளது.

ஏ.ஆர்.எம்.ரபியூதீன்
(திறப்பனை தினகரன் நிருபர்)

வடக்கு மாகாண நிர்வாகம்:

# தவறுகள் செய்த அதிகாரிகள் தாமாக வெளியேறுவது சிறந்தது

மாகாண நிர்வாகத்தை வினைதிறனாக நடத்த வழிவிட வேண்டும்



**கோப்பாய் குறூப் நிருபர்**

கடந்த காலங்களில் வடக்கு மாகாண நிர்வாகத்தில் தவறுகளை விட்ட அதிகாரிகள் தாங்களாகவே உணர்ந்து வெளியேறி மாகாண நிர்வாகத்தை வினைதிறனாக நடத்துவதற்கு வழி விட வேண்டும் என வடமகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் வட மாகாணத்தில் கீழ்நிலை அதிகாரிகளால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் மறைக்கப்பட்டு ஒரு சில மேல் அதிகாரிகளை காப்பாற்றுவதற்காக வட மாகாண பிரதம செயலாளர் அலுவலகம் செயற்பட்டமை தமக்கு ஆதாரபூர்வமாக கிடைக்கப் பெற்றுள்ளது.

13ஆம் திருத்தச் சட்டத்தின் மூலமாக உருவாக்கப்பட்ட மாகாண சபைகள் இலங்கையில் உள்ள அனைத்து மாகாணங்களுக்கும் பொதுவான கட்டமைப்பு.

இலங்கையில் உள்ள ஏனைய எட்டு மாகாணங்களில் உள்ள விவசாய பணிப்பாளர்கள் எவ்வளவு காலம் பணியில் இருந்தார்கள். எவ்வளவு காலம் இருக்க முடியும் என ஆராய்ந்தால் வடக்கு மாகாணத்தின் செயற்பாடுகள் சற்று வித்தியாசமாக இருக்கிறது.

வடக்கு நிர்வாக முறைகேடுகள் தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்கு எவ்வளவு காலத்துக்குள் மனித உரிமை ஆணைக்குழு தீர்வை வழங்கியுள்ளது.

வட மாகாண பிரத செயலாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட மாகாண நிர்வாக அதிகாரிகள் தொடர்பிலான விசாரணைகளை எவ்வளவு காலத்துக்குள் முடிவுறுத்தப்பட்டது? சில முரண்பாடுகள் மறைக்கப்பட்டதன் பின்னணி என்ன? சில முறைப்பாடுகள் விசாரிக்கும் போது குற்றஞ்சாட்டப்பட்டவரின் பெயர் கூட குறிப்பிடாமல் விசாரணைகள் இடம் பெற்றமை எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

ஒரு சிலரின் தேவைக்கேற்ற சினேக பூர்வமாகச் செயற்படும் அதிகாரிகளினால் கீழ் நிலை அதிகாரிகளுக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகிறது.

பொதுமக்களால் அல்லது அதிகாரிகளினால் சக அதிகாரிகள் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை இடம்பெற்று உறுதிப்படுத்தப்படுமானால் பணிநீக்கம் அல்லது தண்டனை வழங்குதலை ஆளுநர் என்ற வகையில் மேற்கொள்வேன். இவ்வளவு காலமும் தவறுகள் செய்தவர்கள் தாங்களாகவே இடமாற்றத்தைப் பெற்றுச் சென்று மாகாண நிர்வாகத்தை உரிய முறையில் மேற்கொள்ள வழிவிட வேண்டும்.

எனது பொறுமையைய் சோதிக்க விரும்பினால் விசாரணைக் குழு அமைத்து எடுக்க வேண்டிய சட்ட நடவடிக்கைகளை எடுப்பதோடு முறைகேடுகள் தொடர்பில் பொது வெளியில் அம்பலப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்படுவேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

தினகரன் வடக்கின் உதயம் Vadakkin Uthayam

## வாகனம் மோதி இளைஞன் பலி



**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரி பொலிஸ் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுணாவில் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் பலியாகியிருப்பதுடன்மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

சாவகச்சேரி நகர் பகுதியில் இருந்து நுணாவில் நோக்கி ஏ9வீதி ஊடாக துவிச்சக்கரவண்டியில் பயணித்த இளைஞர்களை அதே திசையில் பின்னால் வந்த ஹயஸ் ரக வாகனம் மோதிவிட்டு தப்பித்துச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் மறவன்புலவு பகுதியைச் சேர்ந்த 26வயதான க. நிசாந்தன் என்பவர் விபத்தில் சிக்கி பலியானதுடன்அவருடன் பயணித்த மட்டுவில் தெற்கு பகுதியைச் சேர்ந்த 29 வயதான தி.பார்த்திபன் என்ற இளைஞன் படுகாயமடைந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

விபத்து தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## 52 கேஸ் சிலிண்டர்களை திருடிய அறுவர் கைது

**யாழ்.விசேட நிருபர்**



யாழ்ப்பாணம் ஒட்டுமடம் பகுதியில் உள்ள எரிவாயு நிறுவனத்தின் களஞ்சிய சாலையை உடைத்து 52 வெற்றுச் சிலிண்டர்களை திருடிய குற்றச்சாட்டில் முதன்மை சந்தேக நபர்கள் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

கடந்த சில நாட்களுக்கு முன் ஒட்டுமடம் பகுதியில் உள்ள லாஃவ் எரிவாயு நிறுவனத்தின் களஞ்சிய சாலையை உடைத்து 7 லட்சத்து 80 ஆயிரம் பெறுமதியான 52 வெற்றுச் சிலிண்டர்கள் திருட்டுப் போயிருந்தன.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் தலைமை பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்சிஸ் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணம் பொம்மைவெளி மற்றும் நாவாந்துறை பிரதேசங்களைச் சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டடனர். சந்தேக நபர்களிடமிருந்து திருடப்பட்ட சிலிண்டர்களும் கைப்பற்றப்பட்டன.

## புதுக்குடியிருப்பு பிரதேச செயலருக்கு அபகீர்த்தி: நேற்று வடக்கில் கண்டன ஆர்ப்பாட்டம்



**யாழ்.விசேட , சாவகச்சேரி விசேட , ஓமந்தை விஷேட , பரந்தன் குறூப் நிருபர்கள்**

புதுக்குடியிருப்பு பிரதேச செயலரை வேண்டுமென்றே அசௌகரியங்களுக்கு உட்படுத்தியதாக தெரிவித்து அதற்கு எதிராக வடமாகாணத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் நிர்வாக சேவை அதிகாரிகளால் கவனயீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் மற்றும் பிரதேச செயலரின் உத்தியோக பூர்வ வதிவிடம் ஆகியவற்றில் கடந்த 30ஆம் திகதி இரவு சோதனை நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டு 65 லீட்டர் எரிபொருளை மீட்டிருந்தனர்.

அலுவலக மின் பிறப்பாக்கியின் தேவைக்கான 50 லீட்டர் டீசல் , பிரதேச செயலரின் சொந்த பாவனைக்காக சேமித்து வைத்திருந்த 10 லீட்டர் பெற்றோல் மற்றும் 5 லீட்டர் மண்ணெண்ணெய் என்வற்றையே பொலிஸார் மீட்டு இருந்தனர் என பிரதேச செயலர் ஊடகங்களுக்கு அறிவித்திருந்தார்.

இந்நிலையில் பிரதேச செயலரை வேண்டும் என்றே பழிவாங்கும் நோக்குடன் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸார் நடந்து கொண்டதாகவும் , திட்டமிட்டு பிரதேச செயலரை அசௌகரியத்திற்கு உட்படுத்தி அவரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் விதமாக பொலிஸார் நடந்து கொண்டதாகவும், அதனால் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸாருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க கோரி நிர்வாக சேவை வடக்கு கிளை சங்கம் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தது. வடக்கில் உள்ள பிரதேச செயலகங்களில் நேற்றைய தினம் திங்கட்கிழமை காலை 09 மணி முதல் 11 மணி வரையில் சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டதுடன் , கவனயீர்ப்பு போராட்டத்திலும் ஈடுபட்டனர்.நேற்று காலை தென்மராட்சிப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பிரதேச செயலக முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். தென்மராட்சி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர்,உதவித் திட்டப் பணிப்பாளர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் அக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



## கிழக்கின் குரல்

கிழக்கு பல்கலையில்

## இந்துக்கலைகூடமும், அருங்காட்சியகமும்

**வெல்லாவெளி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் வந்தாறுமூலையில் அமைந்துள்ள கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசார பீட இந்து நாகரீகத்துறையில் 'இந்துக்கலைகூடமும், அருங்காட்சியகமும்' திறப்பு விழா, நாளை புதன்கிழமை (10) இடம்பெறவுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் தலைமையிலும், இந்து நாகரீகத்துறைத் தலைவர் கலாநிதி வ.குணபாலசிங்கம் துணைத் தலைமையில், யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன், கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் மா.செல்வராசா, பேராசிரியர் சி.மௌனகுரு முன்னிலையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதுவர் திபின்.பீ.ஆர், விசேட அதிதியாக மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் க.கருணாகரன், சிறப்பு அதிதியாக கலை, கலாசார பீட பீடாதிபதி பேராசிரியர் ஜீ.கெனடி உள்ளிட்டோர் கலந்து கொள்ளவுள்ளனர்.



வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலய ஆடி வேல்விழாவையொட்டி வள்ளியம்பாள் ஆலயம் முன்றலில் நேற்று (8) திங்கட்கிழமை காலை தீமிதிப்பு இடம்பெற்ற போது... (படம்: காரைதீவு குறூப் நிருபர்)

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்காத கட்சிகளும்

## சர்வகட்சி அரசில் பங்கு கொள்ள சந்தர்ப்பம் வேண்டும் - ஹசன் அலி

**ஒலுவில் விசேட நிருபர்**



சர்வக ட்சி அரசாங்கத்தில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்காத அரசியல் கட்சிகளுக்கும் பங்கு வகிக்கவேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் எம்.ரி. ஹசன் அலி தெரிவித்தார்.

இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற அரசியல் கட்சிகளை மாத்திரம் சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்காத பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளும் உள்ளீர்க்கப்பட வேண்டும் என்பது எமது நிலைப்பாடாகும்.

மேலும் பொது தேர்தலில் போட்டியிடாது புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் வேறு கட்சிகளுக்கு பாராளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதித்துவத்தை பெற்று கொடுக்க ஒத்துழைத்த கட்சிகளும் இருக்கின்றன.

இனி ஒரு தேர்தல் நடத்தப்பட்டால் மக்களால் தெரிவு செய்யப்பட கூடிய கட்சிகளும் வெளியில் உள்ளன.

ஆகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வகட்சி அரசாங்கத்தில் பங்கேற்க வருமாறு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்காத கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்க வேண்டும்.

## கல்முனை வலயக் கல்வி பணிப்பாளராக நஜீம் நியமனம்

**காரைதீவு குறூப் நிருபர்**

கல்முனை வலய கல்வி பணிப்பாளராக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சஹதுல் நஜீம் நியமிக்கப்பட்டுள்ளார்.



கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் ஆகியோரிடமிருந்து நியமன கடிதங்கள் கிடைக்கப்பெற்றிருக்கின்றது .

மருதமுனையை சேர்ந்த நஜீம், இலங்கை கல்வி நிருவாக சேவையின் முதலாம் தர அதிகாரி ஆவார். விஞ்ஞான பட்டதாரியான நஜீம் விஞ்ஞான முதுமாணி கல்வி முதுமாணிப் பட்டங்களை பெற்றுள்ளார்.

கல்முனை வலயக் கல்வி பணிப்பாளருக்கான நேர்முகப் பரீட்சை கடந்த ஜூன் மாதம் 16ஆம் தேதி திருகோணமலையிலுள்ள மாகாண கல்வி அமைச்சில் நடைபெற்றது .

## பொருளாதார பிரச்சினை தீர்வதற்கு விசேட பிரார்த்தனை

**கல்குடா தினகரன் நிருபர்**

முஸ்லிம்களின் புதுவருடமான முஹர்த்தினை முன்னிட்டு விஷேட நிகழ்வும், நாட்டின் ஜனாதிபதிக்கும், மக்களுக்கும் ஆசி வேண்டி துஆ பிராத்தனையும் இமாம் ஜஃபர் ஸாதிக் சமூக சேவை நிறுவனத்தினால் ஓட்டமாவடி பாலைநகர் நிறுவனத்தின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்றது.

இமாம் ஜஃபர் ஸாதிக் சமூக சேவை நிறுவனத்தின் தலைவர் அஷ்ஷெய்க் அப்துல் ஹலீம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச சமூக ஆர்வலர்கள், பெரியவர்கள் மற்றும் சிறுவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சினை தீர்ந்து நாட்டிற்கு நல்ல விடிவு காலம் கிடைக்கவும், நாட்டின் ஜனாதிபதி மற்றும் நாட்டு மக்களுக்கு ஆசி வேண்டி விசேட துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது.

## திருமலை உட்துறைமுக வீதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்து;

### இருவர் படுகாயம்

**றொட்டவெவ குறூப் நிருபர்**



திருகோணமலை உட்துறைமுக வீதியில் மோட்டார் சைக்கிள் இரண்டு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் தாதியர் உத்தியோகத்தர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளதுடன் மற்றுமொருவரும் காயம் அடைந்துள்ளார்.

இவ்விபத்து நேற்று (பிற்பகல் 2 மணி அளவில் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை பொது வைத்தியசாலையில் கடமைக்காக மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த தாதியர் உத்தியோகத்தரான திருகோணமலை லிங்க நகர் பகுதியைச் சேர்ந்த எஸ்.துஸ்யந்தி (41வயது) படுகாயம் அடைந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை மற்றைய மோட்டார் சைக்கிளில் பயணித்த உவர்மலைமத்திய வீதியில் வசித்து வரும் எம்.சிவநேசராஷா (68வயது) என்பவரும் காயம் அடைந்த நிலையில் திருகோமணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்து தொடர்பிலான விசாரணைகளை திருகோணமலை தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

விஷேட அறிவித்தல்

இலங்கை வங்கி

நாட்டில் நிலவும் தற்போதைய பொருளாதார நிலைமைகளினால் பாதிப்புக்குட்பட்டிருக்கும் எமது வாடிக்கையாளர்கள் எதிர் நோக்கும் பொருளாதார அசௌகரியங்களை கவனத்திற் கொண்டு இலங்கை வங்கியால் பெற்றுக் கொள்ளப்பட்ட வியாபாரக் கடன்கள், தனிப்பட்ட கடன்கள் மற்றும் லீசிங் உள்ளிட்ட கடன்களைச் செலுத்தக் கூடிய சலுகை முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே உங்களது தவணைகளைச் செலுத்துவதற்கான சலுகைகளை எதிர்பார்ப்பீர்களானால், உங்களது வங்கிக் கிளையின் கடன் அதிகாரி அல்லது முகாமையாளரோடு கலந்துரையாடுங்கள்.

இதற்கான விண்ணப்பங்களை 2022.08.31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பாக குறித்த வங்கிக் கிளையில் சமர்ப்பிக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

1975 BOC www.boc.lk

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# நகர்வலம்










ஆசியான் மாநாட்டில் பங்கேற்ற வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சீன வெளிவிவகார அமைச்சர் வேங் யி மற்றும் ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் யொசிமசா ஹயாசி மற்றும் அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் அந்தனி பிலிங்கன் ஆகியோரை சந்தித்த போது பிடிக்கப்பட்ட படங்களை காணலாம்.

அநு./ நொச்சியாகம அல் ஹிக்மாவில்

# நீண்ட கால ஆசிரியர் பற்றாக்குறைக்கு இதுவரை தீர்வு கிடைக்கவில்லை

## 36 ஆசிரியர்கள் இருக்க வேண்டிய இடத்தில் 20 ஆசிரியர்களே கடமையில்; பாடசாலை சமூகம் கவலை

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

அநுராதபுரம் நொச்சியாகம அல் ஹிக்மா மகா வித்தியாலயத்தில் மிக நீண்ட நாட்களாக நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அநுராதபுரம் கல்விவலயத்திற்குட்பட்ட நொச்சியாகம கோட்டைக் கல்வி பணிமனையின் நிருவாக கட்டமைப்புக்குள் இயங்கும் இப்பாடசாலையானது சீ 1 தரமுடைய ஆரம்பப்பிரிவு முதல் உயர் தரம் வரையான வகுப்புக்களை கொண்ட ஒரு பாடசாலையாகும். இப்பாடசாலையில் 550 க்கும் அதிகமான மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப 36 ஆசிரியர்கள் இருக்க வேண்டிய இடத்தில் 20 ஆசிரியர்கள் மாத்திரமே தற்சமயம் கடமையில் இருக்கின்றனர்.

அண்மையில் ஐந்து வருட இடமாற்றத்தின் போது இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களின் வெற்றிடத்திற்கு இதுவரைக்கும் ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. அதில் நான்கு பேர் ஆரம்பபிரிவு ஆசிரியர்களாவர். அதனால் ஆரம்ப பிரிவு வகுப்புக்களின் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பெரும் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது என பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர். இப்பாடசாலைக்கு பத்து வருடங்களாக கணிதப்பாட ஆசிரியர் எவரும் இல்லையென விசேடமாக சுட்டிக்காட்டப்படுகின்றது. தொடர்ச்சியாக நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்து தருமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாண கல்விப்பணிப்பாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரைக்கும் எந்தவிதமான தீர்வும் கிடைக்கவில்லையென பாடசாலை அபிவிருத்தி சங்கமும் பெற்றோர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

இது விடயம் தொடர்பாக வட மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் என்.என்.ஆர்.நிசாந்தவை தொடர்பு கொண்டு வினவியபோது, பத்து வருடமாக கணிதப்பாட ஆசிரியர் இல்லாத விடயம் பத்திரிகையால் வினவும் போதுதான் எனக்கும் தெரிய வருகின்றது. அது ஒரு பாரிய பிரச்சினையாகும். அது விடயம் தொடர்பாக கவனம் செலுத்துவதுடன் பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்கு விரைவில் தீர்வினை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம்

**எம்.எல்.எஸ்.முஹம்மத்**




ஹெம்மாதகம கோட்டேகொடை, வஹகொட்டுவையைச் சேர்ந்த மாவனல்லை பதுரியா தேசிய பாடசாலையின் அதிபர் எம்.ஏ.எம்.நிஸ்தார் அகில இலங்கை சமாதான நீதவானாக மாவனல்லை மாவட்ட நீதிமன்ற நீதவான் டம்மிக ஹேமபால முன்னிலையில் அண்மையில் சத்தியபிரமாணம் செய்துகொண்டார்.

கடந்த நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக கேகாலை மாவட்ட மக்களின் கல்வி அபிவிருத்தி, சமூக வளர்ச்சி மற்றும் தேசிய ஒற்றுமை உட்பட பல்வேறு துறைகளில் மிக அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வரும் அதிபர் நிஸ்தார், ஹெம்மாதகம அல்அஸ்ஹர் தேசிய பாடசாலையின் முன்னாள் அதிபராகவும், கோட்டேகொடை மஸ்ஜிதுல் ஹுதா ஜும்ஆ பள்ளியின் முன்னாள் நிர்வாக சபை தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

தற்போது மாவனல்லை பதுரிய்யா தேசிய பாடசாலையின் அதிபராகவும் பணியாற்றும் இவர், ஹெம்மாதகம அல்அஸ்ஹர் தேசிய பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியை திருமதி பிஉல் ஜன்னதின் அன்புக் கணவரும், ஹெம்மாதகமையைச் சேர்ந்த மர்ஹூம் முஹம்மத் ஆரிப் மற்றும் மர்ஹூமா ஹாஜியானி ஹலீமா பீபீயின் புதல்வரும் ஆவார்.

# கிணற்றுக்குள் வீழ்ந்த யானை உயிருடன் மீட்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



கருவலகஸ்வெவ பகுதியில் கிணற்றுக்குள் வீழ்ந்த யானை ஒன்றினை பெகோ இயந்திரத்தின் உதவியுடன் உயிருடன் மீட்கப்பட்டு சரணாலயத்திற்குள் விரட்டப்பட்டது.

புத்தளம் கருவலகஸ்வெவ மஹகோன்வெவ பகுதியில் சனிக்கிழமை காட்டு யானையொன்று பாதுகாப்பற்ற முறையில் வெட்டப்பட்ட கிணற்றினுள் வீழ்ந்துள்ளதை அவதானித்த அப்பகுதி மக்கள் பொலிஸாருக்குத் தகவலை வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து பொலிஸார் கருவகஸ்வெவ வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு அறிவித்ததையடுத்து, பொலிஸார் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் குறித்த பகுதிக்குச் சென்று கிணற்றுக்குள் வீழ்ந்த யானையை பார்வையிட்டு பெக்கோ இயந்திர உதவியுடன் கிணற்றுக்குள் வீழ்ந்த யானையை நீண்ட நேரத்திற்கு பின்னர் உயிருடன் மீட்டனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட குறித்த யானை பின்னர் தப்போவ சரணாலயத்திற்குள் விரட்டப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் மாவட்டத்தில்;

# கல்வித்துறையினருக்கு தனியான எரிபொருள் கியூ

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**

அநுராதபுரம் மாவட்டத்தில் கல்நேவ, புல்நேவ கெகிராவ, தமுத்தேகம, எப்பாவல ஆகிய எரிபொருள் நிரப்பு நிலையங்களில் QR முறை நடைமுறைக்கு வந்த பின்னர் எரிபொருள் பெற்றுக் கொள்வதற்கான கியூ வரிசை குறைவடைந்துள்ளது. தற்போது தொடர்ச்சியாக குறைவில்லாமல் எரிபொருள் கிடைக்கப் பெறுவதாகவும் இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு தமுத்தேகம கல்வி வலயத்திலுள்ள கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோருக்கு எப்பாவல எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக தனியாக கியூ வரிசை ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் இலகுவாக எரிபொருளை பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளதாக தமுத்தேகம கல்வி வலய ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

இலங்கை நில அளவைத்திணைக்களத்துக்கு

# 222 வருடம் பூர்த்தி; அநுராதபுரம் மாவட்ட அலுவலகத்தில் பல்வேறு நிகழ்வுகள்

**திறப்பனை தினகரன் நிருபர்**



இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் 222 வருட பூர்த்தியை முன்னிட்டு அநுராதபுரம் மாகாண நில அளவையாளர் திணைக்களம் கொண்டாட்ட நிகழ்வுகள் மற்றும் சமய நிகழ்வுகள் பலவற்றை ஏற்பாடு செய்திருந்ததோடு மாவட்ட அலுவலகத்தில் முக்கிய விழாவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந் நிகழ்வு அண்மையில் அநுராதபுரத்தில் இடம் பெற்றது.

1800 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி ஆளுநர் சேர் பெட்ரிக் நோர்த் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை நில அளவைத் திணைக்களம், தற்போது உயர் வெற்றியை நோக்கி முன்னேறியுள்ளதாக மாகாண நிலஅளவை ஜெனரல் கே.பி.ஜி கருணாநாயக்க இங்கு கலந்து கொண்டு குறிப்பிட்டார். இலங்கையின் 01வது நில அளவையாளர் நாயகமாக ஜெனரல் ஜான்வில் இருந்ததோடு, இந்த பதவிகளில் 22 நில அளவை ஜெனரல்கள் வரை ஆங்கிலேயர்களால் பதவியில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

அதன்படி, முதல் சிங்கள தேசிய நில அளவை ஜெனரலாக என்.எஸ்.பெரேரா அப்போது நியமிக்கப்பட்டிருந்தார். இலங்கையின் அனைத்து அபிவிருத்திப் பணிகளையும் முதலில் ஆதரிக்கும் ஒரு திணைக்களம் என்ற வகையிலும் இந்தத் திணைக்களம் பெரும் பங்கு வகிக்கிறது. இதன் கீழ் அனைத்து அளவீடுகளும் நில அளவையர் திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இன்று இலங்கை நில அளவைத் திணைக்களம் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை அதிகம் பயன்படுத்தும் நிறுவனங்களில் முன்னணி இடத்தைப் பிடித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# கட்டுத்துவக்கு வெடித்து சிவில் பாதுகாப்பு படை வீரர் பலி


**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

காட்டு யானைகளை விரட்டுவதற்காக விவசாய பண்ணைக்குச் சென்ற சிவில் பாதுகாப்பு படை பிரிவைச் சேர்ந்த ஒருவர் கட்டுத்துவக்கு வெடித்ததில் காயமடைந்து அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த (02) உயிரிழந்துள்ளதாக தந்திரிமலை பொலிஸார் தெரிவித்தனர்.

தந்திரிமலை பகுதியைச் சேர்ந்த 45 வயதானவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தந்திரிமலை சிறப்பு அதிரடிப் படை உப அலுவலகத்தில் கடமையாற்றி வரும் குறித்த உறுப்பினர், கடந்த 31 மாநேவ பகுதியில் அமைந்துள்ள அவரது விவசாய பண்ணைக்கு வந்த காட்டு யானைகளை விரட்டுவதற்கு சென்ற போது கட்டுத்துவக்கு வெடித்ததில் பாரிய காயத்திற்குள்ளாகியுள்ளார்.

# புத்தளம் நகர பிதா தலைமையில் கலந்துரையாடல்



**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம். ரபீக் தலைமையில் புத்தளம் நகர சபையின் தகவல் தொழில்நுட்ப செயற்பாடுகளை விருத்தி செய்து மேலும் வினைத்திறன் மிக்கதாக்கும் திட்டம் சம்பந்தமான விசேட கலந்துரையாடல் நகர பிதா எம்.எஸ்.எம். ரபீக் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலுக்கு துறைசார் நிபுணர்களும் வரவழைக்கப்பட்டு அவர்களின் கருத்துக்களும் ஆலோசனைகளும் பெறப்பட்டன.

இந்நிகழ்வில் நகரசபை உறுப்பினர் ரனீஸ் பதூர்தீன், துறைசார் நிபுணர்களான ரின்ஷாத் அஹ்மத், எஸ்.ஏ.சீ. மரைக்கார் மற்றும் நகரசபை உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# பொரளை அஹதிய்யா ஏற்பாட்டில் இஸ்லாமிய புதுவருட நிகழ்வு

**ஏ.எஸ்.எம்.ஜாவித்**



பொரளை அஹதிய்யா மற்றும் இஸ்லாமிய கல்வி நிலையம் ஏற்பாடு செய்த 36வது இஸ்லாமிய புது வருட முஹர்ரம் நிகழ்வு தெமடகொட YMMA தலைமைக் காரியாலயத்தில் அஹதிய்யாவின் அதிபர் சிப்லி ஹாசிம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்விற்கு பிரதம அதிதியாக புரவலர் ஹாசிம் உமர் கலந்து கொண்டிருந்தார், கௌரவ அதிதிகளாக பொரளை அஹதிய்யாவின் பொருளாளர் அலவி முக்தார், இளைஞர் பாராளுமன்ற பிரதி அமைச்சர் அஹமத் சித்தீக், மௌலவி மபாஸ், முன்னாள் முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் அஹமட் முனவ்வர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது விஷேட முஹர்ரம் உரையை மௌலவி மபாஸ் வழங்கியதுடன் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டல் நிகழ்வுகளும் தேவையுடைய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டதுடன் வருமானம் குறைந்த மாணவர்களின் பெற்றோர்களுக்கு உலர் உணவுப் பொதிகளும் அஹதிய்யாவின் ஏற்பாட்டில் அதிதிகளால் வழங்கி வைக்கபட்டது.

இதன்போது மாணவர்களின் பேச்சு, ஹஸீதா, இஸ்லாமிய கீத நிகழ்வுகளும் இடம் பெற்றதுடன் அதிதிகளுக்கு அஹதிய்யாவின் அதிபரினால் நினைவுச் சின்னங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன் அஹதிய்யாவின் பிரதி அதிபரும் ஊடகவியலாளருமான ருசைக் பாறுக் மற்றும் ஊடகவியலாளர் ஏ.எஸ்.எம். ஜாவித் ஆகியோருக்கு அஹதிய்யாவுக்கு பங்களிப்புச் செய்தமைக்காக நினைவுச் சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## கிழக்கின் குரல்

### தமிழர்களிடையே ஒற்றுமை இல்லாவிட்டால்

# திராய்க்கேணியின் நிலைமை முழு கிழக்கு மாகாணத்திற்கும் நேரும்

காரைதீவு குறூப் நிருபர்

தமிழர்களிடையே ஒற்றுமை இல்லாவிட்டால் எதிர்காலத்தில் திராய்க்கேணியின் நிலைமை தான் முழு கிழக்கு மாகாணத்திற்கும் நேரும்.

இவ்வாறு திராய்க்கேணி படுகொலை தினத்தில் உரையாற்றிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் குறிப்பிட்டார்.

1990 ஆகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி இடம்பெற்ற திராய்க்கேணி படுகொலை சம்பவத்தின் 32 வது வருட நினைவேந்தல் நிகழ்வு, சம்பவம் இடம் பெற்ற திராய்க்கேணி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்றது.



அகம் மனிதாபிமான வள நிலையமும், சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பும் இணைந்து இந் நிகழ்வை ஏற்பாடு செய்தனர்.சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் துரையப்பா காத்தவராயன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன் மற்றும் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டார்கள்.

ஆரம்பத்தில் ,படுகொலையின் போது வெட்டிக்கொலை செய்யப்பட்ட 54 பேரின் திருவுருவப் படங்களுக்கு முன்னால் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது.மலர் அஞ்சலி செலுத்தி அக வணக்கம் செலுத்தப்பட்டது.

அங்கு பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன் மேலும் உரையாற்றுகையில்... இந்த வரலாற்றை எல்லாம் நாங்கள் அடுத்த சந்ததிக்கு எடுத்துசெல்ல வேண்டும். சமகால சந்ததியினர் சுதந்திரமாக நிம்மதியாக வாழ வேண்டும் என்பதற்காக இத்தகைய நிகழ்வுகள் நடைபெறுகின்றன.. அம்பாறை மாவட்டத்திலேயே 58 தமிழ் கிராமங்களை இலக்கு வைத்து இன அழிப்பு நடத்தப்பட்டது. ஆலங்குளம், மீனோடைக்கட்டு போன்ற கிராமங்கள் ஒரு தமிழர்களும் இல்லாமல் முற்றாக கபளீகரம் செய்யப்பட்டிருக்கின்றன என்றார்.



கதிர்காமம் கந்தன் ஆலய ஆடி வேல் விழா உற்சவ பத்தாம் நாள் பெரஹரா நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற போது...
(படங்கள்: காரைதீவு குறூப் நிருபர்)

# சமுர்த்தி வங்கி பணியாளர்களுக்கான மூன்று நாள் இணையத்தள பயிற்சிநெறி

தம்பலகாமம் குறூப் நிருபர்

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலக பகுதியில் உள்ள சமுர்த்தி வங்கியாளர்களுக்கான இணையத்தள பயிற்சி நெறியொன்று பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் 97ம் கட்டை சந்தியில் உள்ள வங்கி கட்டடத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டது.

இதில் தம்பலகாமம் சமுர்த்தி வங்கி, தம்பலகாமம் கிழக்கு சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டதுடன் வளவாளராக திருகோணமலை மாவட்ட சமுர்த்தி இணையத்தள பொறுப்பதிகாரி வீ.அன்வர்கான் கலந்து கொண்டார்.

இப் பயிற்சி நெறியானது மூன்று நாட்கள் இடம் பெற்றது.இதில் இணையத்தள பாவனை, வங்கி கணக்கு தொடர்பிலான ஒன்லைன் முறை உள்ளிட்ட பல தகவல் தொழில் நுட்ப முறைமை என பல விடயங்கள் பயிற்சியளிக்கப் பட்டன.

இதில் சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சித்திக், வங்கி முகாமையாளர் எம்.ஏ.ஹிஸ்புல்லா உட்பட சமுர்த்தி வங்கி ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# பட்டப்பின் படிப்பின் மூலம் அதிக ஆராய்ச்சியாளர்களை உருவாக்க முடியும்



உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கர்

(ஒலுவில் விசேட நிருபர்)

பட்டப்பின் படிப்பின் மூலம் அதிக ஆராய்ச்சியாளர்களை உருவாக்க தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தனது பணியை ஆரம்பித்துள்ளதாக, தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீடத்தில் பட்டபின் படிப்பினை தொழில்நுட்பத்தினூடாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (07) நடைபெற்றது, இதில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

முகாமைத்துவ மற்றும் வர்த்தக பீடம் மற்றும் கலை மற்றும் கலாசார பீடங்கள் பல்கலைக்கழகத்தின் முன்னோடி பீடங்கள் என்றும் பல முயற்சிகளில் எப்போதும் முன்னோடியாக இருந்து வருகின்றது.

உங்கள் பட்டபின் படிப்பின் ஆரம்பத்திலிருந்தே தொழில் கூட்டாண்மை மூலம் பயனடைவீர்கள், எதிர்கால வேலைகளை சமாளிப்பதற்கு தேவையான திறன்கள் மற்றும் அனுபவத்துடன் நீங்கள் பட்டம் பெறுவது உறுதி செய்வதற்கு எங்கள் படிப்புகள் கைகூடும்.

பட்டபின் படிப்புகளில் நான்கு முக்கிய வகைகள் உள்ளன. கற்பிக்கப்படும் படிப்புக்கள், ஆராய்ச்சி பட்டங்கள், மாற்றுப் படிப்புகள் மற்றும் தொழில்முறை தகுதிகள் உள்ளன.

ஆகவே விண்ணப்பிக்கும் மற்றும் படிக்கும் படிப்புகள் வகை உங்கள் தொழில் நலன்களைப் பொறுத்ததாகும்.

எதிர்கால தொழில்வாய்ப்புகளை மேம்படுத்தும் நீங்கள் நிச்சயமற்றதாக உணர்ந்தால், ஆசிரியர் மற்றும் வேலைவாய்ப்பு சேவைகள் எப்போதும் ஆதரவு மற்றும் வழிகாட்டுதலுக்காக இருக்கும்மெனவும், உங்கள் கனவுகளைத் துரத்தவும் கடினமாக உழைக்கவும் உங்களால் சாதிக்க முடியாதது எதுவுமில்லையென்றார்.


**உள்ளூராட்சித் திணைக்களம், வடக்கு மாகாணம்.**

**2012ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் கீழான கூட்ட அறிவித்தல்**

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகிய மரியதாஸ் பற்றிக் டிறஞ்சன் ஆகிய என்னால் 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் 66(எ) பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் வடக்கு மாகாணத்திற்குள் அமைந்துள்ள கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூராட்சி அதிகாரசபைகளின் புதிய தவிசாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் அட்டவணையில் குறிப்பிட்ட திகதி மற்றும் நேர அட்டவணையின் பிரகாரம் குறிக்கப்பட்ட இடங்களில் கூட்டப்படுகின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

| தொ. இல. | உள்ளூராட்சி மன்றத்தின் பெயர் | திகதி | நேரம் | கூட்டப்படும் இடம் |
|---|---|---|---|---|
| 1. | வல்வெட்டித்துறை நகர சபை. | 2022.08.23 | மு.ப.9.30 | வல்வெட்டித்துறை நகர சபை சபா மண்டபம். |
| 2. | காரைநகர் பிரதேச சபை. | | பி.ப 2.00 | காரைநகர் பிரதேச சபை சபா மண்டபம். |

**மரியதாஸ் பற்றிக் டிறஞ்சன்,**
**உள்ளூராட்சி ஆணையாளர்,**
**வடக்கு மாகாணம்.**

**உள்ளூராட்சித் திணைக்களம், வடக்கு மாகாணம்,**
**முதியோர் இல்ல வளாகம்,**
**A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.**
**08.08.2022**



## சிறு விளம்பரம்

**மோட்டார் வாகனங்கள்**

**106 கார்கள் விற்பனைக்கு**

UP GL-6557 Ford Fairmont 2001 car கூடிய விலைக் கேள்விக்கு. வெலிபல் ஃபினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0714 542958. 045778

65-7521 Audi A6, 1999 car கூடிய விலைக் கேள்விக்கு. வெலிபல் ஃபினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0714 54 2958. 045780

**117 வேன்கள் விற்பனைக்கு**

251-7794 Mazda 1993 கூடிய விலைக் கேள்விக்கு. வெலிபல் ஃபினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0714 54 2958. 045783

59-6891 Nissan serena 1992 கூடிய விலைக் கேள்விக்கு. வெலிபல் ஃபி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0714 54 2958. 045781

**119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

62-7995 toyota bus 1989 கூடிய விலைக் கேள்விக்கு. வெலிபல் ஃபினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0714 54 2958. 045785

**வேலைவாய்ப்பு**

**303 உயர்தொழில்துறையாளரின் ஆலோசனை**

**பொதுவான சேவைகள்**

நீர்க் கசிவா? கொங்கிறீட் ஸ்லெப், குளியலறை, மீன் தொட்டி, சுவர்களில். எமக்கு சொல்லுங்கள். நாடளாவிய ரீதியில். 0701034266, 0701037076. 046065



## அறிவிப்பு

2011ஆம் ஆண்டு 42ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 5(3) (ஆ) பிரிவுக்கு அமைய இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட தற்காலிக அங்கீகாரத்துக்கு அமைய 2007ஆம் ஆண்டு 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின 9(2) பிரிவுக்கு அமைய கீழ் குறிப்பிடப்படும் நிறுவனத்தின் பெயர் 2022 ஜுலை மாதம் 12ஆம் திகதி மாற்றப்பட்டுள்ளது என்பதை அறிவித்துக் கொள்கின்றோம்.

கம்பனிக்கு முன்னர் இருந்த பெயர் - எசட்லைன் லீசிங் கம்பனி லிமிடட்
கம்பனிப் பதிவு இலக்கம் - பீ.பீ 82 (PB 82)
பதிவு செய்யப்பட்ட முகவரி - இல 120, 120ஏ பண்ணிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை.
கம்பனியின் புதிய பெயர் - **அசட்லைன் பினான்ஸ் லிமிட்டட்**

பணிப்பாளர் சபையின் கட்டளைக்கு அமைய
எசட்லைன் கோப்ரேட் சேர்விஸ் (பிரைவட்) லிமிடட்
கம்பனி செயலாளர்கள்



8ம் கட்டை மெதகமவை வசிப்பிடமாக கொண்ட டீ.பீ.எஸ். பிரியங்கர மெண்டிஸ் ஆகிய நான் ஹெல்த்கெயார் பார்மசி (healthcare pharmacy) பிரதான வீதி, படல்கும்புர என்ற நிறுவனத்தின் வளாகத்தில் காலாவதியான இரண்டு வகை மருந்துகளும் அஸ் பிரின் மாதிரிகளையும் வைத்திருந்தமையால் 07ம் திகதி சித்திரை மாதம் 2022 அன்று மொனராகலை நீதிமன்றத்தில் வழக்கு இலக்கம் 1501/22 இன் கீழ் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு ரூபாய் இருபதாயிரத்தை (20,000/-) அபாராதமாக செலுத்தினேன். அவ்வாறான தவறு இனி என்னால் இடம்பெறாது என்று கூறி இலங்கைவாழ் மக்களிடம் மன்னிப்பு கோருகிறேன்.



**கொழும்பு தாமரை தடாகம் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்**

**ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு (REOI)**

**சட்ட ஆலோசகர்**

**பதவியின் தன்மை**

ஒப்பந்தங்களின் வரைவு வணிக ஒப்பந்தங்களைக் கையாளவும், ஏற்கனவே உள்ள ஒப்பந்தங்கள், ஒப்பந்தங்கள் மற்றும் பிற சட்டக் கருவிகளை மதிப்பாய்வு செய்யவும் எமக்கு வழக்கறிஞரின் ஒருவரின் சேவை தேவைப்படுகின்றது. எனவே இப்பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் நாம் பரிந்துரைக்கிறோம்.

**பொறுப்புகள்**

1. சட்ட உடன்படிக்கைகள் / ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்படும்போது அல்லது மாற்றப்படும் போது அவற்றை மதிப்பாய்வு செய்தல்.
2. புதுப்பிக்கப்படும் போது சட்ட உடன்படிக்கைகளில் அவ்வப்போது திருத்தங்களை உருவாக்குதல்.
3. தற்போதுள்ள மற்றும் புதிய சட்டங்களை செயல்படுத்துவது குறித்து ஆலோசனை வழங்குதல்.
4. கடனாளிகளுக்கு கோரிக்கை கடிதங்களை அனுப்பவும் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் சட்ட நடவடிக்கைக்கு உதவுதல்.
5. பணியாளர் தொடர்பான பிரச்சனைகளில் ஆலோசனை வழங்குதல்

**வழங்கக்கூடிய சேவை**

- மேலே பட்டியலிடப்பட்ட நடவடிக்கைகளுக்கு திறமையான சட்ட ஆலோசனை சேவைகளை வழங்குதல்.

**தகுதி மற்றும் அனுபவம்**

- வழக்கறிஞர் மற்றும் சான்றுறுதி அலுவலராக இருப்பதுடன், LLB நிலை தகைமை இருப்பின் மேலதிக தகமையாக கருதப்படும்.
- சிறந்த ஆங்கில அறிவு மற்றும் அனைத்து சட்ட ஆவணங்களையும் சுயாதீனமாக உருவாக்கும் திறன்.
- வணிக ஒப்பந்தங்கள், தொழிலாளர் பிரச்சினைகள் மற்றும் வழக்கு ஆகியவற்றில் அதிகபட்சமாக 10 வருட பணி அனுபவம்.

**கொடுப்பனவு**

ஒப்பந்ததின்படி பேசித் தீர்மானிக்கலாம்

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி**

**2022 ஆகஸ்ட் 15** ஆம் திகதி

பணிப்பாளர் / தலைமை நிர்வாக அதிகாரி,
**கொழும்பு தாமரை தடாகம் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்**
இல. 320, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10.



இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

பெருந்தோட்ட அமைச்சு

சிறுபயிர் ஏற்றுமதி பெருந்தோட்ட அபிவிருத்திப் பிரிவு

**வரையறுக்கப்படட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்**

**பெல்வத்த சீனித் தொழிற்சாலைக்கு Turbo Alternator One to One Replacement இற்கான வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல் ஆகியவற்றிற்கான சர்வதேச போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் - PR – 12205**

இலங்கை, பெல்வத்தயில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு Turbo Alternator One to One Replacement இற்கான வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல் ஆகியவற்றிற்காக ஆர்வமுள்ள சாரார்களிடமிருந்து வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இத்தால் அழைக்கின்றார்.

1. 2022 செப்டம்பர் 19 ஆம் திகதி வரையும் இலங்கை நியமமாக்கப்பட்ட நேரத்தின் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 20,000 ரூபாவை அல்லது 55.00 அ.ஐ.டொலரை கீழே குறிப்பிடப்பட்டுள்ள வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வரவு வைக்கும் வழி மூலம் செலுத்திய பின்னர், இலங்கை, கொழும்பு-04, மெல்போர்ன் அவென்யு, 27 ஆம் இலக்கத்திலுள்ள வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். விலைமனுக்கோரல் ஆவணங்கள் **www.lankasugar.lk** என்ற லங்கா சீனியின் இணையதளத்திலிருந்து அல்லது **www.plantationindustries.gov.lk** என்ற பெருந்தோட்ட அமைச்சின் இணையதளத்திலிருந்து அல்லது **www.mfa.gov.lk** என்ற வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் இணையதளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்யப்படலாமென்பதுடன் மீளளிக்கப்படாத வைப்புத் தொகைக்கான பண வைப்புத் துண்டு அல்லது வங்கி வரவு ஆகியன விலமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

| விளக்கம் | வங்கிக் கணக்கு - இலங்கை ரூபாவில் |
|---|---|
| வங்கியின் பெயர் | இலங்கை வங்கி |
| கிளை | மிலாகிரிய |
| கணக்காளரின் பெயர் | வரையறுக்கப்பட்ட லங்கர் சீனி (தனியர்) நிறுவனம் |
| கணக்கிலக்கம் | 73927950 |
| Swift Code | BCEYLKLX |

2. தேவையான உருப்படிகள்
   1. **Turbo Alternator One to One Replacement** இற்கான ஒரு எண்ணிக்கை வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல்
3. விலைமனுதாரர் விலைமனு ஆவணங்களுடன் மீளளிக்கப்படாத பணவரவுத் துண்டை இணைத்தல் வேண்டும். அப்படியாக இணைக்கப்படாதவிடத்து, அவ்வாறான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
4. விலைமனுக்கள் முத்திரையிடப்பட்ட தபாலுறையொன்றில் 2022 செப்டம்பர் 20 ஆம் திகதியன்று இலங்கை நியமமாக்கப்பட்ட நேரமாகிய பி.ப. 2 மணிக்கு பிந்தாமல் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் அவென்யு, கொழும்பு-04, இலங்கை என்ற முகவரியில் நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது தூதஞ்சல் சேவை மூலமாக மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையும் தன்மையில் அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Tender for the Supply, Installation & Commissioning of Turbo Alternator One to One Replacement – Pelwatte Sugar Factory"** என்ற சொற்கள் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். அதன் பின்னர் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்களின் திறத்தலை விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பார்வையிடலாம். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. கேள்விச் சபையின் தீர்மானமே இறுதியானதாகும்.
5. அனைத்து விலைமனுக்களும் 3,665.00 அ.ஐ. டொலர் அல்லது 1,350,000 இலங்கை ரூபா பெறுமதியானதும் மாற்றக்கூடாததும் நிபந்தனையற்ற வகையில் மாற்றக்கூடியதும் 2022 டிசம்பர் 6 ஆம் திகதி வரையிலும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன பெறுகை முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: +94 11 2505558. அலைபேசி: +94 77 010 3359. தொலைநகல்: +94 11 2500674. மின்னஞ்சல்: **sapumal@lscl.lk)**

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,**
**இல.: 27, மெல்போர்ன் அவென்யு,**
**கொழும்பு-04, இலங்கை.**

# பொதுக்கூட்ட அறிவிப்பு

நேசன் லங்கா பினான்ஸ் பி எல் சி இன் பங்குதாரர்களின் விசேட பொதுக் கூட்டம் 2022 ஆகஸ்ட் 25 ஆம் தேதி வியாழக் கிழமை, மு. ப 10.00 அன்று நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. ஜூம் லிங்க் வழியாக, நவலோக உயர்கல்வி கல்லூரி (பி.வி.டி.) லிமிடெட்டின் போர்டு அறையில் இருந்து நடத்தப்படும்.

**சாதாரண தீர்மானம்**

இரண்டு பில்லியன் எண்ணூற்று எழுபது மில்லியன் நாற்பத்தாயிரத்து முந்நூற்று இருபத்தி ஐந்து (2,870,040,325) சாதாரண வாக்களிக்கும் பங்குகள் நிறுவனத்தின் தற்போதைய பங்குதாரர்களுக்கு பங்குவியாபார பதிவேட்டின் அடிப்படையில் 100 பங்குகளை வைத்திருக்கும் ஒவ்வொரு பங்குதாரருக்கும் 212 பங்குகள் என்ற விகிதத்தில் புதிய பங்குகள், ஒரு பங்கு ரூபா 0.70 என்ற வகையில், இரு பில்லியன் ஒன்பது மில்லியன் இருபத்தி எட்டாயிரத்து இருநூற்று இருபத்தி ஏழு ஐம்பது சதம் (ஷரூ. 2,009,028,227.50), 30 ஆகஸ்ட் 2022 அன்று வர்த்தகத்தின் முடிவில் பங்குதாரர்கள் வைத்திருக்கும் சாதாரண பங்குகள் (பதிவு தேதி), இது நிறுவனத்திற்கும், தற்போதுள்ள அனைத்து பங்குதாரர்களுக்கும் நியாயமானது என்று இயக்குநர்கள் குழுவின் கருத்துக் கூறுகிறது. சி.டி.எஸ் மற்றும் பங்குகளை ஏற்றுக்கொள்ளும், துறப்பதற்காக கடைசி தேதியில் சந்தா செலுத்தப்படாத பங்குகள் மற்றும் தற்காலிக ஒதுக்கீட்டு கடிதத்தில் குறிப்பிடப்பட்ட பணம் மற்றும் பணம் செலுத்தப்படாத பங்குகள் நிராகரிக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டும், மேலும் அத்தகைய நிராகரிக்கப்பட்ட பங்குகள் ஏற்கனவே இருக்கும் பங்குதாரர்களுக்கு அதே விலையில் ஒதுக்கப்படும் கூடுதல் பங்குகளுக்கு விண்ணப்பிக்கும் லங்கா கிரெடிட் அண்ட் பிசினஸ் லிமிடெட் மற்றும் சின்ஹா கேபிடல் இன்வெஸ்ட்மெண்ட் லிமிடெட் உள்ளிட்ட பங்குதாரர்களுக்கு அதே விலையில் தற்காலிக ஒதுக்கீடு ஒதுக்கப்படும்.

**வாரியத்தின் உத்தரவின்படி**

**கார்ப்பரேட் ஆர்கேட் லிமிடெட்**
**நிறுவனத்தின் செயலாளர்**

**09 ஆகஸ்ட் 2022**

குறிப்பு:

அ) பங்குதாரருக்கு அவர்/அவள் சார்பாக பங்குபெற மற்றும் வாக்களிக்க (ஆன்-லைன்) இன்னொருவரை நியமிக்க உரிமை உண்டு.

ஆ) ஒரு ப்ராக்ஸி ஹோல்டர் நிறுவனத்தின் பங்குதாரராக இருக்க வேண்டிய அவசியமில்லை. இந்த நோக்கத்திற்காக ப்ராக்ஸியின் படிவம் இணைக்கப்பட்டுள்ளது.

இ) ப்ராக்ஸியின் பூர்த்தி செய்யப்பட்ட படிவம், விசேட பொதுக் கூட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு 48 மணிநேரத்திற்கு முன்னதாக வர வேண்டும்:

(i) கம்பனி செயலாளர்களுக்கு தபால் அல்லது கையால் வழங்கப்பட்டது, கார்ப்பரேட் ஆர்கேட் லிமிடெட் இல.9/4, 1-8, எட்மன்டன் வீதி, கொழும்பு 06

அல்லது

(ii) ஸ்கேன் செய்து மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பப்பட்டது: **nationlankaegm@gmail.com**

**கோவிட் - 19 தொற்றுநோயைக் கருத்தில் கொண்டு சுகாதார அதிகாரிகளால் வெளியிடப்பட்ட சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டுதல்கள் மற்றும் நாட்டில் நிலவும் தற்போதைய எரிபொருள் நெருக்கடியை கருத்தில் கொண்டு பங்குதாரர் கூட்டங்களை கிட்டத்தட்ட நடத்துவதற்கு பட்டியலிடப்பட்ட நிறுவனங்களுக்கு கொழும்பு பங்குச் சந்தை வழங்கிய வழிகாட்டுதல்களை கருத்தில் கொண்டு இயக்குநர்கள் குழு, நிறுவனத்தின் ஒழுங்குமுறை விதிகளுக்கு இணங்க ஆடியோ அல்லது ஆடியோ/விசுவல் மூலம் விசேட பொதுக் கூட்டம் (EGM).**

**இதில் பங்கேற்க பதிவுசெய்யப்பட்ட பங்குதாரர்கள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட ப்ராக்ஸி வைத்திருப்பவர்கள் மட்டுமே உள்நுழைய அனுமதிக்கப்படுவார்கள் ஆன்லைன் வழியாக (EGM).**

முன்மொழியப்பட்ட பங்குதாரர்களின் ஒப்புதலைப் பெறுவதற்காக ஒரு விசேட பொதுக் கூட்டத்தைக் கூட்டுவதற்காக, பங்குதாரர்களுக்கான சுற்றறிக்கை, பதிலாள் படிவம் போன்ற பிற தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் விசேட பொதுக் கூட்டத்தின் அறிவிப்பை அச்சிட்டு வெளியிட வேண்டாம் என்று நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு முடிவு செய்தது. பின்வரும் காரணங்கள்:

(i) நாட்டில் அச்சிடுவதற்கான காகிதங்களுக்கு தட்டுப்பாடு.

(ii) அனுப்புவதற்கான அஞ்சல் லேபிள்களின் பற்றாக்குறை.

மேற்கூறிய காரணங்களால், மேற்கூறிய ஆவணங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளபடி கொழும்பு பங்குச் சந்தையின் இணையத்தளத்திலும் **(https://www.cse.lk/)** நிறுவனத்தின் இணையத்தளத்திலும் **(www.nationlanka.com)** ஹோஸ்ட் செய்யப்படும் அல்லது பதிவேற்றப்படும். நிறுவனத்தின் நிலம் மற்றும் சங்கத்தின் கட்டுரைகள் சட்டங்களால் அனுமதிக்கப்பட்டது.

**Nation Lanka Finance PLC**

# INVITATION FOR BIDS (IFB)

## KARACHCHI PRADESHIYA SABHA KILINOCHCHI

## LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT (LDSP)

**LOAN NUMBER : P163305**

1) The Democratic Socialist Republic of Sri Lanka has received a loan from the World Bank (WB) towards the cost of Local Development Support Project (LDSP) and intends to apply part of the proceeds of this loan to payments under the Contract for **Construction of Shopping Complex at Skanthapuram Market (Stage I)**

2) The Chairman, Local Authority Procurement Committee (LAPC) on behalf of the Karachchi Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for **Construction of Shopping Complex at Skanthapuram Market (Stage I)** as described below.

| No. | Contract No. | Contract Name | Tentative Estimated Cost (Rs.Mn) | Required Minimum CIDA Grade | Contract Period |
|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/KN/KPS/2022/03 | Construction of Shopping Complex at Skanthapuram Market (Stage I) | 8.37 | C7 | 154 Days |

3) Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure.

4) To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty of **Building Construction** for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).

5) Qualification requirements are indicated in Section 5 (Bidding Data and Contract Data) of the Bidding document.

6) Interested bidders may obtain further information from **Chairman, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi** (T.P No: 0212285761, Fax No: 0212285690) and inspect the bidding documents at the address given below from **09th August 2022** until **05th September 2022** from **09:00 Hrs to 15:00 Hrs** on normal working days.

7) A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Chairman, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi** from **09th August 2022** until **05th September 2022** from **09:00 Hrs** to **15:00 Hrs** on normal working days upon payment of a non-refundable fee of **Two Thousand Rupees (Rs.2,000.00)**. The method of payment will be by cash.

8) Bids shall be delivered in duplicate to the address: **Chairman, Local Authority Procurement Committee, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi** at or before **14.00 Hrs on 06th September 2022**. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

9) Bids shall be valid up to **22nd November, 2022**. All bids shall be accompanied by a Bid Security of **Rs.100,000.00.** Bid Security shall be valid up to **20th December, 2022.**

10) A pre-bid meeting will be held on **30th August 2022** at 11.00 Hrs in **Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi.**

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC)**
**Karachchi Pradeshiya Sabha,**
**A9 Road,**
**Kilinochchi**

09.08.2022

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அம்பன்பொள தபால், மாம்பிட்டிகம திவுல்வெல வீதி என்ற முகவரியில் வசிக்கும் வன்னி அதிபத்து முதியன்சேலாகே லசன்த சம்பத்குமார சந்திரசேகர (தே.அ.அ.இலக்கம் 830613390V) ஆகிய என்னால் வாரியபொளபாதெனிய. மடாடுவ இல.111 என்ற முகவரியில் வசிக்கும் மலலஹெட்டிநாயக்க முதியன்சேலாகே ரமேஷ் தாரக விஜேரத்ன (தே.அ.அ.இல:921041748V) என்பவருக்கு வழங்கப்பட்டதும், குருணாகல் பிரசித்த நொத்தாரிசு திருமதி ஏ.பி.ஜீ.ரூபிகா விக்ரமதிலக என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 27 மற்றும் 2019 ஒக்டோபர் 10ஆம் திகதியிட்ட விஷேட அற்றோணி தத்துவமானது இத்தால் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதென இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்களிற்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன். இத்தினத்திலிருந்து என்சார்பில், அற்றோணிதாரரினால் மேற்கொள்ளப்படும் எத்தகைய செயல்கள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பாக நான் பொறுப்புதாரியல்ல எனவும் அறிவித்துக்கொள்கின்றேன்.

**2022 ஆகஸ்ட் 09 ஆம் திகதி**
**வன்னி அதிபத்து முதியன்சேலாகே**
**லசன்த சம்பத் குமார சந்திரசேகர**

## இலங்கை முதலீட்டுச் சபை
## பெறுகை அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் பெறுகைக்கான அறிவித்தல் 2022.08.06 அன்று சனிக்கிழமை மற்றும் 2022.08.09 செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்களில் டெய்லி நியூஸ் (Daily News) பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

SUPPLYING AND LAYING OF INTERNAL WATER DISTRIBUTION NETWORK AT BINGIRIYA EXPORT PROCESSING ZONE (BgEPZ) CONTRACT NO. BOI/TS/BgEPZ/2020/08/02.002

மேற்படி பெறுகைக்கான கேள்விப்படிவங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக ஆர்வமுள்ள ஒப்பந்தக்காரர்கள் 2022.08.06 சனிக்கிழமை மற்றும் 2022.08.09 செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்களில் Daily News பத்திரிகை அறிவித்தலிற்கமைவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**

## இலங்கை முதலீட்டுச் சபை
## பெறுகை அறிவித்தல்

கீழே குறிப்பிட்டுள்ள பெறுகைக்கான விலைமனுக்களுக்கான அழைப்பானது 2022 ஒகஸ்ட் 09 ஆம் திகதியன்று ''தினமின'' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் www.investsrilanka.com என்ற இலங்கை முதலீட்டுச் சபையின் இணையதளத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**இலங்கை முதலீட்டுச் சபையின் பாதுகாப்பு பதவி நிலை அலுவலர்களுக்காக சீருடைகளை தைப்பதற்கான விலைமனுக்களுக்கான அழைப்பு**

ஒப்பந்த இல.: **BOI/S&S/Q/79/2022**

இப்பெறுகை தொடர்பான விலைமனுக்கோரல் ஆவணங்கள் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ''தினமின'' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள விளம்பரத்திற்கமைவாகவும் www.investsrilanka.com என்ற இலங்கை முதலீட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணையதளத்திற்கமைவாகவும் செயற்படலாம்.

விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை நிருவாகத்திற்கான சிரேஷ்ட பிரதி பணிப்பாளரிடமிருந்து 011 2543041/074 1531432 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**

## 2007ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

2007ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242ம் பிரிவின் கீழ் கிங்ஸ் கார்டியாக் ஹொஸ்பிடல் (பிறைவேட்) லிமிட்டட் (Kings Cardiac Hospital (Pvt) Ltd) எனும் கம்பனியானது கிங்ஸ் ஹொஸ்பிடல் கொழும்பு (பிறைவேட்) லிமிட்டட் (Kings Hospital Colombo (Private) Limited) எனும் கம்பனியுடன் 2022ஆம் ஆண்டு ஜுலை மாதம் 29ம் திகதியிலிருந்து இணைக்கப்பட்டுள்ளது எனவும் அத்துடன் 2007ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(1)(a)ம் பிரிவின் கீழ் இணைப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்பதனையும் இத்தால் அறியத்தருகின்றோம்.

| | |
|---|---|
| இணைக்கப்பட்டுள்ள கம்பனியின் பெயர் | : **கிங்ஸ் ஹொஸ்பிடல் கொழும்பு (பிறைவேட்) லிமிட்டட்** |
| இணைக்கப்பட்டுள்ள கம்பனியின் பதிவு செய்யப்பட்டுள்ள விலாசம் | : இல. 18/A, முகாந்திரம் E.D. தாபரே மாவத்தை, நாரஹேன்பிட்டிய, கொழும்பு-05 |
| இணைக்கப்பட்ட திகதி | : 29 ஜுலை 2022 |
| இணைக்கப்பட்ட கம்பனியின் பதிவு இல. | : PV 6109 |

**சபையின் கட்டளைப்படி**
**Co-Serv (Private) Limited**
**செயலாளர்கள்**

எனது இலக்கம் : BD/BD/LND/3/5/45

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)

**காணி எடுத்தற் சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

**ப தர்மதூத்த தேசிய பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் அமைப்பதற்காக காணி எடுத்தல்**

1964 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 07 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட இலக்கம் 2289/30 மற்றும் 2022.07.20 திகதியுடைய அரசாங்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்கவும்.

| | |
|---|---|
| மாகாணம் | : ஊவா |
| மாவட்டம் | : பதுளை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : பதுளை |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : 78டீ பதுளை கிழக்கு |
| இறுதிகிராம வரைபட இலக்கம் | : ஆரம்ப வரைபட இலக்கம் ப 748 |
| துண்டுகளின் எண்ணிக்கை | : 01 |
| காணியின் முழு விஸ்தீரணம் | : 0.9181 ஹெக்டயார் |
| காணி அமைந்துள்ள கிராமம் | : கெந்தலகம (பிரிவு இலக்கம் 4) பதுளை மாநகர சபை |

**டீ.எம்.எல்.எச்.திசாநாயக்க**
**பிரதேச செயலாளர்**
**பதுளை**

**2022.08ம் மாதம் 01ஆந் திகதி**
**பதுளை பிரதேச செயலகத்தில்**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

## கொழும்பு தாமரை தடாகம் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்

## விலைமனுக்கோரல் (IFB)

### வடிவமைப்பு மற்றும் கட்டுமானச் செயற்திட்டம்

கொழும்பு தாமரை தடாகம் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்டின் தலைமை நிர்வாக அதிகாரியின் சார்பாக பிரதான கொள்முதல் குழு மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான விலைக்கோரலுக்கு உங்களை முன்கூட்டியே தகுதிப்படுத்தியுள்ளது என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர். | மீளச் செலுத்தப்படாத கட்டணம் (ரூ). | தேவைப்படும் மனுப் பாதுகாப்புத் தொகை (ரூ). | மனுக்கள் திறக்கப்படும் / மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CLT/WK/001/2022 | பொது கழிவறை | 5,000.00 | 50,000.00 | 19-08-2022 14.00 மணி |
| CLT/WK/002/2022 | பொது கழிவறை | 5,000.00 | 50,000.00 | 19-08-2022 14.00 மணி |
| CLT/WK/003/2022 | 15மீ மட்டத்திலான கழிவறை | 5,000.00 | 50,000.00 | 19-08-2022 14.00 மணி |
| CLT/WK/004/2022 | நுழைவு கூடாரம் | 5,000.00 | 50,000.00 | 19-08-2022 14.00 மணி |
| CLT/WK/006/2022 | தரை தள வரவேற்பிடத்தின் சிற்ப விளக்கு பொருத்துதல்கள் | 5,000.00 | 50,000.00 | 19-08-2022 14.00 மணி |
| CLT/WK/007/2022 | தரை தள வரவேற்பிடம் | 5,000.00 | 50,000.00 | 19-08-2022 14.00 மணி |
| CLT/WK/008/2022 | கட்டிடம்,களஞ்சியசாலை மற்றும் பிற சிறிய கட்டமைப்புகளை இடித்தல் | 5,000.00 | 50,000.00 | 19-08-2022 14.00 மணி |

1. படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மீளச் செலுத்தப்படாத மனுக் கட்டணத்தைச் செலுத்தி **2022.08.06** முதல் **2022.08.19** ஆம் திகதி **14.00** மணி வரை விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
2. தகுதியான மனுதாரர்கள் பின்வரும் தகுதி அளவுகோல்களுக்கு இணங்க வேண்டும்.
3. மேலதிக விபரங்கள் மற்றும் மனு ஆவணங்களை **இல.320,டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10. இல் அமைந்துள்ள கொழும்பு தாமரை தடாகம் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்டின் நிதிப் பிரிவில்** பரிசீலனை செய்து பெற்றுக்கொள்ளலாம்.
4. மனு ஆவணங்களை இல.320, டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 இல் அமைந்துள்ள கொழும்பு தாமரை தடாகம் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்டின் நிதிப் பிரிவில் இலவசமாக பரிசீலனை செய்ய முடியும்.
5. மனுக்கள் செல்லபடியாகும் காலம் **60 நாட்கள்.**
6. அனைத்து மனுக்களும் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் மேலே குறிப்பிட்டுள்ள மனுப் பாதுகாப்புத் தொகையுடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
7. முத்திரையிடப்பட்ட மனுக்கள் **இல.320, டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 இல் அமைந்துள்ள கொழும்பு தாமரை தடாகம் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்டின் நிதிப் பிரிவிற்கு** கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.
8. ஒப்பந்த காலம் **03 மாதங்கள்.**
9. மனுக்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதி **2022.08.19** ஆம் திகதி **14.00** வரையாகும் மற்றும் அதன் பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.
10. மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதி அவ்வேளையில் பிரசன்னமாயிருக்க முடியும்.

பணிப்பாளர் / தலைமை நிர்வாக அதிகாரி,
**கொழும்பு தாமரை தடாகம் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்**
இல. 320, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10.











## கலேவல பிரதேச சபை உறுப்பினர் வீ.எம்.மௌபீத்தின் முயற்சியில்...

# பின்தங்கிய நமடகஹவத்த கொரக்காவ கிராமம் இன்று அபிவிருத்தியின் முன்னணியில்



மாத்தளை மாவட்டத்தில் கலேவல பிரதேசத்தில் நமடகஹவத்த கொரக்காவ எனும் கிராமம் நீண்டகாலமாக மிகவும் பின்தங்கிய கிராமமாக காணப்பட்டது. இன்று இக் கிராமத்தில் அனைத்து வசதிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இவ்வூரை இவ்வாறு மாற்றியமைக்க முழு மூச்சாக செயற்பட்டவர் வீ.எம். மௌபீத். இவர் திருகோணமலையில் பிறந்து நமடகஹவத்த கொரக்காவ கிராமத்தை வசிப்பிடமாக கொண்டவர். திருகோணமலை சென். ஜோசப் கல்லூரில் கல்வி கற்று வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தவர். திருமணத்தின் பின்னர் நமடகஹவத்த கொரக்காவைக்கு சென்ற போது மிகவும் பின்தங்கிய, அடிப்படை வசதிகள் அற்ற இருந்த கிராமத்தை தனது சுய முயற்சியிலும் தனது தனிப்பட்ட நீதியிலும் கட்டி எழுப்பியுள்ளார்.

அது தொடர்பாக அவர் தினகரனுக்கு தெரிவித்த கருத்துக்களை தொகுத்துள்ளோம்...

வீ.எம்.மௌபீத் கலேவல பிரதேச சபை உறுப்பினர், அகில இலங்கை சமாதான நீதவான், மாத்தளை மாவட்ட மனித உரிமை அமைப்பின் பணிப்பாளர், ஐக்கிய நாட்டு சபையின் மாத்தளை மாவட்ட பெண்கள் அமைப்பின் (UN WOMEN) உறுப்பினர் போன்ற பதவிகளை வகிப்பவர். நமடகஹவத்த கொரக்காவயில் பள்ளிவாசல் இல்லாத குறையை நிவர்த்தி செய்ய இவரின் உறவினரின் (இலியாஸ்) கொணியில் ஒரு தக்கியாவை அமைத்து ஊருக்கு ஒரு பள்ளியை நிருவினார். அதன் பின்னர் கலேவல நகரில் இருந்து கூட அமைதியாக வாழ்வதற்கான சிறந்த இடமாக கருதப்பட்டு அனேகர் இங்கு குடியேறினர். அத்தோடு சில வீடுகளுக்கு மட்டுமே இணைக்கப்பட்ட மின்னிணைப்பை மத்திய மாகாண அமைச்சராக இருந்த பந்துல யாளேகமவுடன் தொடர்பு கொண்டு மின்னிணைப்பையும் இவர் விரிவுபடுத்தினார். அத்தோடு பாதை மற்றும் இதர அபிவிருத்திகளுடன் வீதி விளக்குகள் பொருத்துதல் போன்றன கிரமமாக நடைபெற்றது. ஆனால் கலேவல பிரதேசத்தில் பல கிராமங்களில் பாரிய குடிநீர் பிரச்சினையும் கடும் வரட்சி காலத்தில் நீரின்றி மக்கள் சொல்லொணா துயரங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர். வீ.எம்.மௌபீத் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டதால் அன்றைய நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சராக இருந்த ரவூப் ஹக்கிமிடம் பல முறை சென்று விடுத்த வேண்டுகோளுடன் பிராந்திய அலுவலகங்களுக்கு சென்று இவர் எடுத்த முயற்சியால் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டது. அத்தோடு கலேவல பிரதேசத்தில் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிராந்திய அலுவலகம் அமைச்சரினால் திறந்து வைக்கப்பட்டது. அந் நிகழ்வுக்கு தனது தனிப்பட்ட நிதியில் சுமார் நான்கு இலட்சம் ரூபாவை ஒதுக்கி கல்விக்கு கரம் கொடுப்போம் என்னும் தொனிப்பொருளில் சுமார் (100) மாணவர்களுக்கு அந்நிகழ்வில் அமைச்சரின் கரங்களால் பாடசாலை கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் பாலர் பாடசாலை மாணவர்களின் கல்விக்காக தளபாடங்களையும் வழங்கி வைத்தார். ஆனாலும் இவர் வரட்சி நிலவும் காலங்களில் நீரின்றி கஷ்டப்படும் மக்களுக்கு பவுஸர் மூலம் குடிநீரை வழங்கியுள்ளார்.மற்றும் நமடகஹவத்த கிராம சேவையாளர் காரியாலய clinic center க்கு மக்கள் அமர்வதற்கான வசதிகளையும் செய்து கொடுத்தார்.











தம்புள்ள வைத்தியசாலையில் சேதமடைந்த மரண பரிசோதனை காரியாலயத்தை ஜே.எம்.ஓ.வைத்தியரின் வேண்டுகோளுக்கிணங்க புனர் நிர்மாணம் செய்து கொடுத்தார். இவ்வாறு இவர் நண்பர்களுடன் (மாத்தளை மாவட்ட SLMC அமைப்பாளர் ஐயுப் மற்றும் செயளாலர் நிஹ்மதுல்லா) ஆகியோருடன் இணைந்து இவர் செய்து வந்த சேவைகளுக்கு அரசியல் பலமும் மிக அவசியமாக காணப்பட்டதால் 2011-2018 வரை அரசியலில் ஈடுபட ஆரம்பித்தார். 2018 ஆம் ஆண்டு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் கலேவல பிதேச சபைக்கு போட்டியிட்டு வெற்றி பெற்று கலேவல பிரதேச சபை உறுப்பினரானார்.

கலேவல பிரதேசத்தில் சில வைத்தியசாலைகளுக்கு அம்பியூலன்ஸ் வசதிகள் இருக்கவில்லை. பலர் பல கோணங்களில் முயற்சி எடுத்தாலும் கைகூடி இருக்கவில்லை. பிரதேச சபை உறுப்பினர் வீ.எம்.மௌபீத்துக்கு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் ஈடுபாட்டால் அவருக்கு 2019 ஆம் ஆண்டு சுகாதார இராஜாங்க அமைச்சராக இருந்த பைசால் காஷிமின் மத்திய மாகாண இணைப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

அப்பதவியை பயன்படுத்தி அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரால் நிறைவேற்ற முடியாமல் போன சில விடயங்களை செய்து முடித்துள்ளார்.அதில் முக்கியமானது கலேவல பிரதேசத்திற்கு ஒரு கோடியே முப்பத்தைந்து இலட்சம் ரூபா பெறுமதியான நான்கு அம்பியூலன்ஸ் வண்டிகளை சுகாதார இராஜாங்க அமைச்சரின் செயலாளர் அகமத் கபீரின் ஆலோசனைக்கு அமைவாக பெற்று கொடுத்தார். அவை பெற்றுக் கொடுக்கப்பட்ட வைத்தியசாலைகள் கலேவல, மாதிப்கொல, யட்டவத்த மற்றும் ஒயிலகந்த மக்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒயிலகந்த தோட்ட வைத்தியசாலைக்கும் வழங்கப்பட்டது. கலேவல பிரதேசத்தில் இதற்கு முன்னர் ஒரு அம்பியூலன்ஸ் வண்டியே காணப்பட்டது. அதுவும் உடைந்த பழைய வண்டியாகவே இருந்தது. புதிய அம்பியூலன்ஸ் வண்டியில் இரண்டு நோயாளர்களை கொண்டு செல்லக்கூடிய வசதிகள் உள்ளன. கொரோனா காலத்தில் இதனால் உயிர்ச்சேதங்களின்றி பல உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. கொரோனா பாதிப்பின் போது இந்த அம்பியூலன்ஸ் வண்டிகளால் மக்கள் பெரும் பயனை அடைந்துள்ளனர். அத்தோடு இவர் நின்று விடாது கொரோனா பாதுகாப்பு அங்கிகளை அரசு வழங்குவதற்கு முன்னரே கலேவல பொலிஸ் நிலையம் மற்றும் கலேவல வைத்தியசாலைக்கும், மாதிபொல வைத்தியசாலைக்கு தனது சொந்த நிதியின் மூலமே வழங்கி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தினார்.

அத்தோடு கலேவல பிரதேசத்திலுள்ள பொலிஸ் நிலையத்திற்கும் கணனிகளையும் வழங்கியுள்ளார். கலேவலயில் அனைத்து பாடசாலைகளிலும் தரம் ஐந்து புலமை பரிசில், க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர் தரம் போன்ற பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டி பரிசு, பதக்கம் வழங்கி கௌரவித்து அவர்களை ஊக்குவிப்பதோடு அம் மாணவர்களுக்கு கல்வி புகட்டிய ஆசிரியர்கள், அதிபர்களை கௌரவபடுத்தியதோடு ஊடக பணியாற்றும் ஊடகவியலாளர்களையும் கௌரவித்துள்ளார்.அனேக முஸ்லிம் பாடசாலைகளுக்கு கணனிகளையும் வழங்கியுள்ளார். நமடகஹவத்த பாடசாலையில் ஒரு பகுதிக்கு சுற்று மதிலும் மாதிபொல பாடசாலைக்கு வர்ணம் பூசுதலும் நுழைவாயிலும் (gate) அமைத்து கொடுத்தார். மேலும் மாதிப்பொல, கலேவல வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்ய சுகாதார இராஜாங்க அமைச்சருடன் கலந்துரையாடி சுமார் ஏழு கோடி ரூபாய் இரு வைத்தியசாலைகளுக்கும் ஒதுக்கப்பட்டு அதற்கான திட்டங்களை அரச கட்டட பொறியியலாளர்களால் வகுக்கப்பட்டு கொண்டிருக்கும் போது நல்லாட்சி அரசில் ஏற்பட்ட 52 நாள் குழப்பத்தால் ஒதுக்கப்பட்ட நிதி கிடைக்காமல் போய்விட்டது.

இவ்வாறு மக்கள் நலனில் அக்கறையோடு செயற்படும் பிரதேச சபை உறுப்பினர் வீ.எம்.மௌபீத் சில பள்ளிவாசல்களுக்கு நீர் தாங்கிகளையும் அத்தோடு நமடகஹவத்த பள்ளிவாசல் அலுவலகத்துக்கு சோபா செட்டும் அன்பளிப்பு செய்துள்ளார். நோன்பு காலங்களில் பள்ளிகளுக்கு பேரீத்தம் பழங்களை அன்பளிப்பு செய்துள்ளார்.

மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் விளையாட்டு கழகங்களுக்கும் தொடர்ச்சியாக வழங்கி வருகிறார். இன்றைய நாடு முகம் கொடுத்திருக்கும் பொருளாதார பிரச்சினையில் மக்களுக்கு தேவை பாதை, பள்ளிவாசல் அபிவிருத்தியல்ல பசிக்கு தேவையான உணவாகும். அதற்கான வழிவகைளை நாம் மேற்கொள்ள வேண்டுமென கூறுகிறார்.

அத்தோடு அரசு சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளை நாடும் போது சில பிரச்சினைகள் ஏற்படுவதால் அதை தவிர்த்து மாற்று வழியில் மக்களுக்கு உலருணவு பொருட்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளதாகவும் கூறினார். மக்கள் வாழ்வதற்கான அதி முக்கிய அடிப்படை வசதிகளை நிறைவு செய்து விட்டால் மக்கள் தமது ஜீவனோபாயத்தை தேடி கொள்வார்கள் என்றார். அத்தோடு தன்னுடைய இன, மத பேதமற்ற சேவையை மக்கள் பெரு வரவேற்போடு எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.











சதூர்தீன்
மாத்தளை சுழற்சி நிருபர்







கரவெட்டி தேவமாதா ஆலயத் திருவிழா சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு கரவெட்டி பங்கு தந்தை அருட்திரு சாள்ஸ் ஜஸ்டின் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தினமும் நவநாள் திருப்பலி மாலை 5.00மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும். திருவிழா திருப்பலி 15/08/2022 திங்கள்கிழமை காலை 6.00மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும்.

# அனாமிகா பண்பாட்டு மையம் அங்குரார்ப்பணம்: தென்னிந்திய நடிகர் நாசர் பிரதம விருந்தினர்

கிண்ணியா தினகரன் நிருபர்

மூதூர் சேனையூர் அனாமிகா களரி பண்பாட்டு மையம் நூலகம், கலை கூடம், களரி, ஆவணக் காப்பகம், கணனி கூடம் என எதிர்கால சந்ததியினருக்கு பயன்பெறும் வகையில் திருவாளர் கலாநிதி பாலசிங்கம் சுகுமார் தலைமையில் சனிக்கிழமை காலை 10.00 மணி அளவில் கோலாகளமாக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தென்னிந்திய நடிகர் நாசர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்ததோடு கலை, கலாசார, பண்பாட்டு அலுவல்கள் சார்ந்த முக்கிய பிரமுகர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் என்று பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் கூத்துக்கள், நாட்டார் இலக்கியங்கள் மற்றும் பண்பாட்டு பாரம்பரிய நிகழ்வுகள் என்று பல நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டமை விசேட அம்சமாகும்.

பேராசிரியர் பால சுகுமார் மற்றும் எழுத்தாளரும் சமூக ஆர்வளருமான ரட்ணசிங்கம் சிந்தனையில் உருவாகியுள்ள அனாமிகா பண்பாட்டு மையம் மூதூர் மண்ணில் ஒரு இலக்கிய மைல்கல்லாகவே கருதப்படுகிறது.



# பொத்துவிலில் தொழிலிழந்தவர்களுக்கு உலர் உணவு வழங்கல்

அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

பொத்துவில் பிரதேச சபைக் குட்பட்ட பிரதேசத்தில் வசிக்கும் பொருளாதார நெருக்கடி காரணமாக தொழிலிழந்த முஸ்லிம், தமிழ் குடும்பங்களுக்கு ஐகோனிக் யூத்ஸ் அமைப்பின் பொத்துவில் கிளையினால் உலர் உணவு பொதிகள் ஞாயிற்றுக்கிழமை (07) பிரதேச ஒருங்கிணைப்பாளர் எம்.அத்னான் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பல குடும்பங்கள் தொழிலும் இன்றி பல சிரமத்துக்கு மத்தியில் வாழ்ந்துவரும் இந்நிலையில்,

இன மதங்களை தாண்டி இப்பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 30 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.

# பதக்க வாய்ப்பைத் தவறவிட்ட இலங்கை வீர, வீராங்கனைகள்



இங்கிலாந்தின் பெர்மிங்ஹாமில் நடைபெற்ற பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள் நேற்று நிறைவடைந்தது. இதில் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற பத்தாவது நாள் போட்டிகளில் இலங்கை வீர, வீராங்கனைகள் பதக்க வாய்ப்புகளை தவறவிட்டனர்.

இதில் பெண்களுக்கான நீளம் பாய்தல் இறுதிப்போட்டியில் பங்கேற்ற இலங்கை வீராங்கனை சாரங்கி சில்வா, 13ஆவது இடத்தை பிடித்து போட்டியை நிறைவுசெய்தார்.

தகுதிச்சுற்று போட்டியில் இவர் 06.42 மீற்றர் தூரம் பாய்ந்திருந்த போதும், இறுதிப் போட்டியில் 06.17 மீற்றர் தூரம் பாய்ந்திருந்த நிலையில், 13ஆவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டார்.

இந்தப்போட்டியில் பொதுநலவாய போட்டி சாதனையை பதிவுசெய்த நைஜீரிய வீராங்கனை ஈசா புரூம் 07.00 மீற்றர் தூரம் பாய்ந்து தங்கம் வென்றதுடன், அவுஸ்திரேலிய வீராங்கனை புரூக் புஸ்சுக்கேல் 06.95 மீற்றர் தூரம் பாய்ந்து வெள்ளிப்பதக்கத்தையும், கானாவின் டெபோராஹ் அகுவா 06.94 மீற்றர் பாய்ந்து வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

அதேபோன்று ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் பங்கேற்ற சுமேத ரணசிங்க இறுதிப்போட்டியில் 10ஆவது இடத்துடன் தொடரை நிறைவுசெய்துகொண்டார். இவருக்கு கிடைத்த மூன்று வாய்ப்புகளில் அதிகமாக 70.77 மீற்றர் வீசினார்.

இந்தப்போட்டியில் பாகிஸ்தான் வீரர் அர்ஷாட் நதீம் பொதுநலவாய போட்டி சாதனை மற்றும் தன்னுடைய தனிநபர் சிறந்த பிரதியினை பதிவுசெய்து 90.18 மீற்றர் தூரம் வீசி தங்கப்பதக்கத்தை வென்றதுடன், கிரேனேடாவின் எண்டர்சன் பீட்டர்ஸ் வெள்ளிப்பதக்கத்தையும் (88.64), கென்யாவின் ஜூலியஸ் எகோ வெண்கலப்பதக்கத்தையும் (85.70) வென்றனர்.

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது :..............
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை :..............
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை :..............
வாக்களித்தவர் பெயர் :..............
முகவரி :..............
மொபைல் இல. :..............

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500 2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 13-08-2022 இல. 20




# பொதுநலவாய விளையாட்டு போட்டியில் மாயமான இலங்கையர்கள் பத்தாக உயர்வு



இங்கிலாந்தின் பெர்மிங்ஹாம் நகரில் நடைபெற்ற பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்கச் சென்ற இலங்கை குழாத்தில் காணாமல் போனோர் எண்ணிக்கை பத்தாக அதிகரித்துள்ளது.

இவர்கள் பிரிட்டனிலேயே தங்கி இருப்பதற்கு முயற்சிப்பதாக சந்தேகிக்கப்படுகிறது என்று முன்னணி விளையாட்டு அதிகாரி ஒருவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

தமது போட்டி நிகழ்ச்சியை பூர்த்தி செய்த பின் ஒன்பது வீரர்கள் மற்றும் முகாமையாளர் ஒருவர் காணாமல்போயுள்ளனர் என்று பெயரை வெளியிடக்கூடாது என்ற நிபந்தனையுடன் இலங்கை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவர்களில் ஜூடோகா சமில டிலானி, அவரின் முகாமையாளர் அசேல டி சில்வா மற்றும் மல்யுத்த வீரர் ஷனித் சதுரங்க ஆகிய மூவரும் கடந்த வாரம் காணாமல்போயினர்.

இது தொடர்பில் இலங்கை அதிகாரிகள் பொலிஸில் முறையிட்டுள்ளனர். "அது தொடக்கம், மேலும் ஏழு பேர் காணாமல் போயினர்" என்று அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

"இவர்கள் தொடர்ந்து பிரிட்டனில் தங்கியிருந்து வேலைவாய்ப்பை பெற்றுக் கொள்ள முயசிப்பார்கள் என்று நாம் சந்தேகிக்கிறோம்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொதுநலவாயப் போட்டியில் 160 பேர் கொண்ட குழாம் பங்கேற்றிருப்பதோடு, அனைவரும் நாடு திரும்புவதை உறுதி செய்வதற்கு அவர்களின் கடவுச்சீட்டுகளை நிர்வாகத்தினர் தம்மிடம் வைத்துள்ளனர். எனினும் சிலர் வெளியேறுவதை இந்த முயற்சி தடுக்கவில்லை.

ஆரம்பத்தில் காணாமல்போன மூவரையும் பொலிஸார் கண்டுபிடித்தபோதும் அவர்கள் ஆறு மாத விசா காலத்தை வைத்திருக்கும் நிலையில் உள்நாட்டு சட்டம் எதனையும் மீறி இருக்கவில்லை. இதனால் அவர்களுக்கு எதிரான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று இலங்கை அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

"உண்மையில், எங்களின் கைவசம் இருந்த கடவுச்சீட்டுகளை திருப்பித் தரும்படி பொலிஸார் எம்மை கைவிட்டனர். அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பது பற்றியும் பொலிஸார் எம்மிடம் கூறவில்லை" என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

போட்டிகளில் இருந்து ஆறு இலங்கையர்கள் காணமால்போனது பற்றி விசாரணை நடத்தி வருவதாக பெர்மிங்ஹாம் பகுதியை உள்ளடக்கிய பிரிட்டனின் வெஸ்ட் மிட்லாண்ட் பொலிஸ் படையினர் தெரிவித்தனர். "அவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன் தொடர்பில் உறுதி செய்வதற்கு விசாரணைகள் தொடர்கின்றன" என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

எனினும் 10 இலங்கையர்கள் காணாமல்போனது உட்பட இது தொடர்பில் மேலும் விபரங்களை அளிப்பதற்கு பிரிட்டன் பொலிஸ் மற்றும் அந்நாட்டு உள்துறை அமைச்சு மறுத்துள்ளது.

இம்முறை பொதுநலவாய போட்டியில் இலங்கை ஒரு வெள்ளி மற்றும் மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றது.

எனினும் சர்வதேச போட்டிகளில் பங்கேற்ற இலங்கை விளையாட்டு வீரர்கள் கடந்த காலங்களிலும் இவ்வாறு காணாமல்போயுள்ளனர். கடந்த ஆண்டு ஒக்டோபரில், உலக சம்பியன்சிப் தொடர் ஒன்றுக்கு ஒஸ்லோ சென்ற இலங்கை மல்யுத்த அணி முகாமையாளர் தமது அணியை கைவிட்டு காணாமல்போனார்.

தென் கொரியாவில் நடைபெற்ற 2014 ஆசிய விளையாட்டுப் போட்டியில் இரண்டு இலங்கை வீரர்கள் காணாமல்போனதோடு அவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை.

2004 இல் இலங்கை கைப்பந்து தேசிய அணி என்று கூறிக் கொண்ட 23 பேர் போட்டி ஒன்றில் பங்கேற்பதற்கு ஜெர்மனி சென்று அங்கு காணாமல்போனார்கள்.

## சர்வதேச செய்திகள்

# 2030ம் ஆண்டில் இந்தியா 50 சதவீதமான மாற்று எரிபொருள் பாவனைக்கு தயாராகிவிடும்



நிலத்தில் இருந்து அகழ்ந்து எடுக்கப்படும் எரிசக்தி பொருட்களுக்கு பதிலாக மாற்று எரிசக்தியை பயன்படுத்தும் திட்டத்துக்கான அனுமதியை இந்திய அமைச்சரவை வழங்கியுள்ளது. இதன் பிரகாரம் 2030ம் ஆண்டளவில் 50 சதவீதமான எரிசக்தி உபயோகம் மாற்று வழிகளின் வாயிலாகப் பெறப்படும் என்றும் 2005ம் ஆண்டு மட்டத்தில் இருந்து பார்க்கும்போது இந்தியாவின் கார்பன் வெளியீடு 2030ம் ஆண்டில் 45 சதவீதத்தால் குறைக்கப்படுமென்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இம்மாற்றுவழிக்கான நிதி மற்றும் தொழில்நுட்ப தேவைப்பாடுகள் சர்வதேச உதவிகளுடன் ஈடுசெய்யப்பட வேண்டியிருந்தாலும் இதுவரையிலான முன்னேற்றம் உள்ளூர் வளங்களின் மூலம் அடையப்பெற்றுள்ளது எனவும் இந்திய எரிசக்தித்துறைத் தகவல்கள் குறிப்பிட்டுள்ளன. இதன் பிரகாரம் 2030ம் ஆண்டளவில் இந்தியா வெளிவிடும் கார்பனின் அளவு ஒரு பில்லியன் தொன்களால் குறைக்கப்படும் எனவும் 2070ம் ஆண்டளவில் எரிசக்தி மூலமாக கார்பன் வெளியேற்றம் முற்றாக நிறுத்தப்பட்டுவிடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

2030ஆம் ஆண்டில் 50 சதவீதமான மின்சாரம் எண்ணெய், நிலக்கரி பயன்பாடின்றி பெறப்பட வேண்டுமானால் 65 முதல் 70 சதவீதமான மின்சார உற்பத்தி மாற்று வழிகளிலான உற்பத்திசாலைகள் வழியாக பெறப்பட வேண்டிய அவசியமும் அதற்கான நிதிவளமும் தேவைப்படும் என இயற்கையியலாளர் சுனிதா நாராயண் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியா இந்த இலக்கை அடைவதற்கு சராசரி இந்தியர்களின் வாழ்க்கை முறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. இந்திய ரயில் துறை மாத்திரம் வருடாந்தம் 60 மில்லியன் தொன் கார்பன் வெளியீட்டை குறைக்க வேண்டியிருக்கும்.

# சீன எல்லையோரமாக இந்திய-அமெரிக்க போர்ப் பயிற்சி

### அக்டோபரில் ஆரம்பம்



எதிர்வரும் அக்டோபர் 18 முதல் 31 வரையில் உத்தர் காண்டில் இந்தியாவும் அமெரிக்காவும் கூட்டு யுத்தப் பயிற்சிகளில் ஈடுபடவுள்ளன. 'யுத்தபியாஸ்' என அழைக்கப்படும் இந்த யுத்தப் பயிற்சி சீன எல்லைக்கு அருகாமையில் அவுலி என்ற பகுதியில் நடைபெறும் என்றும் மலைப்பாங்கான பகுதியில் பயங்கரவாத தாக்குதல்களை எதிர்கொள்வது தொடர்பாக இப் பயிற்சி அமையும் என்றும் புதுடில்லி தகவல்கள் மூலம் அறிய முடிகிறது.

இது இந்தியா – அமெரிக்க படைகள் கூட்டாக ஈடுபடும் 18வது போர்ப் பயிற்சியாகும். இவ்விரு நாடுகளும் கடைசியாக அலஸ்காவில் தமது பயிற்சியை நடத்தியிருந்தன. கடும் பனிக்காலத்தில் யுத்தம் செய்வது தொடர்பானதாக இப்பயிற்சி அமைந்திருந்தது.

# ரஷ்ய ஆயுத கொள்வனவு நாடுகளுக்கு எதிரான தடை இந்தியாவுக்கு அமெரிக்கா விலக்களித்துள்ளது



ரஷ்யாவிடமிருந்து இராணுவ உதவி பெறும் நாடுகளுக்கு அமெரிக்கா விதிக்கும் இராணுவ உதவித் தடையில் இருந்து இந்தியாவுக்கு பைடன் நிர்வாகம் விலக்கு அளித்துள்ளது. கலிபோர்னியா மாநில ஜனநாயகக் கட்சி காங்கிரஸ் சபை உறுப்பினரான ரோகன்னா கொண்டு வந்த திருத்தத்துக்கு அமைய இவ்விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. கடந்த ஜூலை 14ம் திகதி அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் கொண்டுவரப்பட்ட இத்திருத்தத்துக்கு முழு ஆதரவு கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் எதிரிகளைத் தண்டிப்பதற்காகவே இச்சட்டம் இருப்பதாகவும் அமெரிக்காவின் நண்பர்களைத் தண்டிப்பதற்கு அல்ல என்று பாதுகாப்புத்துறை விமர்சகர்களான ஹூசைன் அக்கானி மற்றும் அபர்ணா பாண்டே ஆகியோர் இது குறித்து கருத்து தெரிவித்துள்ளனர். அமெரிக்காவின் இந்த நல்லெண்ண வெளிப்பாடு இரு நாடுகளுக்கு இடையிலான உறவை மேலும் வளர்க்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பத்தாண்டு காலப்பகுதியில் அமெரிக்காவிடமிருந்து இந்தியா 21 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இராணுவ தளபாடங்களைக் கொள்வனவு செய்துள்ளது. இந்தியாவின் இராணுவ நவீனமயமாக்கல் மெதுவாக நிகழ்ந்து வருகின்ற போதிலும் இந்தியாவை தன் நெருக்கமான தோழனாகவே அமெரிக்கா கருதி வருகிறது.

இதேசமயம் கடந்த 2018ம் ஆண்டு 5.43 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வான் பாதுகாப்பு ஏவுகணைகளை ரஷ்யாவிடமிருந்து இந்தியா கொள்வனவு செய்திருந்தது. ரஷ்ய இந்திய இராஜதந்திர உறவின் 75வது ஆண்டை முன்னிட்டு இக்கொள்வனவு இடம்பெற்றதாக இந்தியாவுக்கான ரஷ்ய தூதுவர் கடந்த ஜூன் மாதம் தெரிவித்திருந்தார்.